Registered as a Newspaper

பக்கங்கள் : 8

விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 01 | 16 - 12 - 94 | வெள்ளிக்கிழமை | ஓசை 301

## அறுபது பாடசாலை அதிபர்களுக்கு புதுடில்லியில் பயிற்சிக்கு நடவடிக்கை

இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் இருந்து 60 அதிபர்களைத் தெரிவு செய்து புதுடில்லிக்கு மூன்று மாதகாலப் பயிற்சிக்கு அனுப்புவதற்கு கல்வி உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான விண்ணப்பங்களை கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம். டி. பீரிஸ் ஒன்று சி, டி, ஒன்று சி இரண்டு தரத்திலுள்ள அதிபர்களிடமிருந்து கோரியுள்ளார். வெளிநாட்டுப் பயிற்சி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழேயே இவர்களுக்கு இப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது அதிபர்களுக்கான இந்தப் பயிற்சி புதுடில்லி கல்வி ஆராய்ச்சி தேசியப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது பயிற்சிக் காலம் 21 நாட்களாகும் இந்தப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் அதிபர்கள் 50 வயதுக்கு குறைந்தவராயும் ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் அதிபர்கள் தமது விண்ணப்பங்களை மாகாண கல்விப் பணிப்பாளரின்

[8ஆம் பக்கம் பார்க்க]

# இராணுவ அதிகாரிகள் அடங்கிய அரச தரப்புக்குழு 21 ஆம் அல்லது 22 ஆம் திகதியில் யாழ். வரும்

## மோதல் தவிர்ப்பு நிலை குறித்து பேச்சு

(யாழ்ப்பாணம்)

இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கிய அரசாங்கத்தரப்புக் குழுவினர் எதிர்வரும் 21-ம் அல்லது 22-ம் திகதி யாழ்ப்பாணம் வரலாம் என நம்பகரமாகத் தெரிய வருகின்றது. இக்குழு, விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையில் கடைப்பிடிக்கப்படவுள்ள 'மோதல் தவிர்ப்பு உடன்பாடு' பற்றிய வழிமுறைகளை ஆராயும் எனவும் தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கமும் - சிறிலங்கா அரசாங்கத் தரப்பினரும், மோதல் தவிர்ப்பு நிலையும், அதைத் தொடர்ந்து போர் நிறுத்தம் ஒன்றையும் ஏற்படுத்த கொள்கை அளவில் இணங்கியுள்ளதைத் தொடர்ந்து, இவை தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றி ஆராயவென அரசாங்கத் தரப்புக் குழுவினர் எதிர்வரும் 21-ம் அல்லது 22-ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வரவுள்ள இவ் அரசதரப்புக் குழுவினர், விடுதலைப்புலிகள் இயக்கத்துடன், 'மோதல் தவிர்ப்பு நிலை,' 'போர் நிறுத்தம்' ஆகிய இராணுவம் தொடர்பானவிவகாரங்கள்பேசவுள்ளதால், இக்குழுவில் ஓரிரு இராணுவ அதிகாரிகளும் இடம்பெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே முதலாம் கட்டப் பேச்சுக்களில் இராணுவத் தரப்பினர் சேர்த்துக் கொள்ளா ததையிட்டு இராணுவம் விசனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து. விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கப் படைகளுக்கும் இடையிலான தாக்குதல் தவிர்ப்பு நிலை அரசாங்கத் தரப்பால் அறிவிக்கப்படலாம் எனவும் அறிய வருகின்றது. இதைத் தொடர்ந்து இடம்பெறும் விரிவான பேச்சுக்களின் பின்னரே நிலையான போர்நிறுத்த அறிவிப்பு வெளியாகும் எனவும் தெரிய வருகின்றது.

## தைப்பொங்கலுக்குப் பின்பே விரிவான பேச்சுக்கள் நடக்கலாம்

### லூசியன் ராஜகருணா தெரிவிப்பு

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்திற்குப் பின்னரே சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையிலான விரிவான பேச்சுக்கள் நடைபெற இடமுண்டு என சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் லூசியன்

நிறுத்தம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. எனவே விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை

ஆராய்வதும் முக்கியமானது என மேலும் அவர் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ்தினம் அளவில் யுத்த நிறுத்தம் ஏற்படும் என

## கொழும்புப் பொருளாதார நிலைகளை விடுதலைப்புலிகள் தாக்கலாமாம்

### பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பல குழுக்கள் கொழும்பு நகரில் பல பொருளாதார மையங்களைத் தாக்கும் நோக்குடன் ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவினர் கொழும்பிலும் புறநகர் பகுதியிலும் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்குடன் சகல தனியார் பாதுகாப்பு நிறுவனங்களையும் உசார்நிலையில் இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

நிறுவனங்களுக்குள் பிரவேசிக்கும் வாகனங்களும் பொது மக்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். கையில் கொண்டு செல்லும் பொருள்கள் பற்றியும் விழிப்பாக இருக்க கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

## 5மில். டாலர் தரகுப்பணம் கொடுத்த ஆயுதத் தரகரின் அவலம்

(கொழும்பு)

சர்ச்சைக்கு உரிய வகையில் ரஷ்ய நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட 72 மில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான ஆயுத பேரம் அப்போது பிரதமராக இருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவினால் ரத்துச்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ் ஆயுத விற்பனவு முகவர் மற்றுமொருபோரை நடத்த வேண்டிய இக்கட்டான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. நட்பின் அடிப்படையில் முற்பணமாக பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவருக்கும், விமானப்படை அதிகாரி ஒரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## டி.பியின் அதிகார துஷ்பிரயோகத்தால்

விடுதலைப்புலிகளுக்கும்இடையிலான விரிவான பேச்சுக்கள் நடைபெற இடமுண்டு என சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் ஊசியன் ராஜகருணா பி.பி ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. எனவே விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை விரும்புகிறார்கள். எனவே எதிர்காலத்தில் யுத்த நிறுத்தம் தொடர்பாக ஆராய்வதும் அதனை எவ்வாறு அமுல் செய்வது என்பது குறித்து ஆராய்வதும் முக்கியமானது என மேலும் அவர் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ்தினம் அளவில் யுத்த நிறுத்தம் ஏற்படும் என நம்பவில்லை. குறைந்தது ஜனவரிமுதலாம்திகதிமட்டிலேயே யுத்த நிறுத்தம் ஏற்படலாம் எனநினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# டி.பியின் அதிகார துஷ்பிரயோகத்தால் அரசிற்கு 800 கோடி ரூபா நட்டம்

## - நீதி அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான டி. பி, விஜேதுங்கா தமது ஆட்சிக்காலத்தின் போது நிதியை தவறாகப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு நீதி அமைச்சரும் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று மூன்று அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை அவர் வெளியிட்டார். அப்போது அவர் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவுக்கு அமைவாக 1991லும், 1992லும் சென்ற ஆண்டிலும் முதல் காலாண்டுகாலப் பகுதிகளில் சுங்கத்தீர்வையை நீக்கியது பற்றிய அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் காரணமாக நாட்டிற்கு வருடாந்தம் சுமார் 500 கோடி ரூபாவரை நட்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார். பெரும்பாலும் இச் சுங்கத்தீர்வை ரத்துச் செய்யப்படுவது மொத்த விற்பனை வரியுடன் சம்பந்தப்பட்டுள்ளது. இதனால் முந்நூறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது மொத்தமாக நாட்டுக்கு வருடாந்தம் எண்ணூறு கோடி ரூபா வருமான இழப்பு ஏற்படுவதற்கு இந் நடவடிக்கை காரணமாகியுள்ளது. இது அரசாங்க வருமானத்தின் ஆறு சதவிகிதமாகும் இதன் காரணமாகவே வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை அதிகமாகி வருகிறது. ஆகவே இந்த நட்டத்தை ஈடுசெய்ய மக்களிடமிருந்து வரிஅறவிட வேண்டி ஏற்படுகிறது. இதற்கு மாற்றீடாக மத்திய வங்கியிடமிருந்து ஒரு தொகைப் பணத்தை கை மாற்றாகப் பெற வேண்டி இருக்கும். இதனால் நாட்டில் பணவீக்கம் ஏற்படும்-

இத்தகையநடவடிக்கைகள் அதிகாரத்தை முழுமையாக துஷ்பிரயோகம் செய்ததற்கு சமனானதாகும் எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

## சமாதான பேச்சு குறித்து சந்திரிகா விளக்குவார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சிங்கள மக்களுக்கு விளக்கமளிக்க உள்ளதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

சில தினங்களில் பேச்சுவார்த்தைகள் குறித்த விளக்க உரையை ரூபவாகினி, வானொலி மூலம் அவர் ஆற்ற உள்ளதாகவும் எதிர்கால பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதே அவரது நோக்கமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கட்டுப்பாட்டு விலையில் யாழ்ப்பாணத்திற்கு மா!

### கொள்கை அளவில் அரசு இணக்கம்?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு மா விநியோகம் செய்வது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. தற்போது யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மா புதிய அரசின் விலைக்குறைப்பிற்கிணங்க கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

இதே விலைக்கு யாழ்ப்பாணத்திலும் விநியோகம் செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

யாழ். அரச அதிபர் விலைக் குறைப்பு சம்பந்தமாக சமீபத்தில் கொழும்பில் முக்கிய அதிகாரிகளுடன் பேசியுள்ளார் எனத் தெரியவருகிறது.

இப்பேச்சின் போது மற்றைய மாவட்டங்களில் விற்பனை செய்யப்படும் விலைக்கு யாழ்ப்பாணத்திலும் பொது மக்களுக்கு மா விநியோகம் செய்யப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இதனடிப்படையில் அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு மா யாழ்ப்பாணத்தில்

(7ஆம் பக்கம் பார்க்க)

## தேசத்துரோகி சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் கடந்த 12-ம் திகதி காட்டிக்கொடுக்கும் தேசத் துரோகி ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சாக்கப்பா எனப்படும் இவர் கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விமானப்படை-ஊர்வாசிகள் மோதலில் ஒருவர் பலி

### மேலும் மூவருக்கு காயம்

[கொழும்பு]

நீர்கொழும்பு பகுதியில், விமானபபடையினருக்கும், கிராம வாசிகள் சிலருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் மூவர் காயமுற்றதாகவும் தெரியவருகிறது.

விமானப் படையை சேர்ந்த இருவர் மிக மோசமாக தாக்கியதில் ஜானக சுதந்த என்பவர் (23 வயது) உயிரிழந்தார். மற்றும் இருவர் படுகாயங்களுடன் வைத்திய

(8ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைத்த இராணுவம் மக்களை துன்புறுத்தியது

திருகோணமலை மாவட்டம் சம்பூர் இராணுவ முகாமிலிருந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர்இலக்கந்தை கிராமத்தைச்சுற்றி வளைத்து அங்குள்ளமக்களை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். கடந்த 12ஆம் திகதி காலை 7-00 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன் பின்னர் இரட்ணம் நாகராசாஎன்பவருக்கு சொந்தமான இரண்டு மாடுகளையும் வண்டிலையும் இராணுவத்தினர் பறித்துச் சென்றுள்ளனர். இதன் பெறுமதி 25,000 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மீன்பிடி உபகரணங்களை பறித்தெடுத்த கடற்படை

### மண்டைதீவு கடற்பரப்பில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவ; கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட கடற்படையினர் அவர்களின் பெறுமதிமிக்க மீன்பிடி உபகரணங்களை பறித்தெடுத்தபின் விரட்டியடித்துள்ளனர்.

நேற்றுக்காலை 6-30 மணியளவில் நடந்த இச்சம்பவத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவர் 800 ஆக அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது- இதுவரை மருத்துவ பீடங்களுக்கு வருடாந்தம் 680 மாணவர்களே அனுமதிக்கப்பட்டுவந்தனர்- 1994/95ம் கல்வியாண்டில் மருத்துவ பீடங்களிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 800 ஆக அதிகரிக்கப்பட உள்ளதாக உயர் கல்வி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்,

[8ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


## இடமாற்றப்பட்டுள்ளது

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் சேவையாற்றிய வரதன் வைத்தியசாலை யா/03/726 புத்தூர் மேற்கு சோமாஸ்கந்த கல்லூரிக்கருகாமையில் இடமாற்றப்பட்டு சேவைகள் வழமை போல் நடைபெற்று வருகின்றன.

[10412]

## புலமைப்பரிசில் BRIGHT இன் புத்தகங்கள்

புலமைப்பரிசில் 5-ம்ஆண்டு கணிதம் ரூபா 60, தமிழ் ரூபா 50, கட்டுரை மஞ்சரி ரூபா 50 கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, தனலட்சுமி புத்தகசாலை, நாயகபாலன்புத்தகசாலை சிவம் மெடிக்கல் புத்தகசாலை, மொடேன் புத்தகசாலை, கமலா புத்தகசாலை ஆசிர்வாதம் புத்தகசாலை.

(10378)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த அலுவலருக்கு யாழ் நகரிலிருந்து 2 மைல் சுற்றுவட்டாரத்தில் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு:- சற்குணபாலன், மக்கள் வங்கி கன்னாதிட்டி யாழ்ப்பாணம் அல்லது 165/5 வேம்படி வீதி யாழ்ப்பாணம்.

(10389)

## 1995 உங்களுக்கு எப்படி?

விற்பனையாகிறது!! உங்கள் பிறந்த திகதிப்படி "95"ம் ஆண்டில் நிகழவிருக்கும் பலாபலன்களை முன்கூட்டியே அறியலாம். வேலணை சோதிடர் V.A சிவராசா, 152 B, அரசடி றோட், கந்தர்மடம்.

(10396)

## மில்க்வைற் சலவைத்தூள்

துணிகளின் துரித சலவைக்கும், பளிச்சிடும் வெண்மைக்கும் மில்க்வைற் சலவைத்தூள். வெற்றுப்பக்கற் 10க்கு ஒரு "மில்க்வைற் செய்தி" இதழ். வெற்றுப்பக்கற் 25க்கு ஒரு அப்பியாசக் கொப்பி. வெற்றுப்பக்கற் 100க்கு ஒரு கவர்ச்சியான கைலேஞ்சி. வெற்றுப்பக்கற் 500க்கு ஒரு


# கடற்படை பாதுகாப்புடன் படகுசேவைக்கு மறுப்பு

(கற்பிட்டி)

மன்னாரிற்கும் கற்பிட்டிக்கும் இடையிலான பயணிகள் படகுச்சேவையை கடற்படையினரின் பாதுகாப்பில் நடாத்துவதற்கு படகு உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் இவ்வாறு கற்பிட்டி துறைமுகத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் மன்னார் கடற்பகுதியில் விடுதலைப்புலிகளால் கடற்படைக் கப்பல்கள் தாக்கப்பட்டது. ரோந்தின் போது கடற்படையினர் தமது பாதுகாப்பிற்கு பயணிகள் படகுகளை கவசமாக பாவித்து விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில்இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே பயணிகள் படகுகளிற்கு பாதுகாப்பளிக்க முன்வந்திருக்கின்றனர் எனக் கருதப்படுகின்றது.

இது பயணிகளின் பாதுகாப்பிற்கும் தமது படகுகளின் பாதுகாப்பிற்கும் உகந்தது அல்ல என்பதனால் கடற்படையினரின் பாதுகாப்பில் படகுச்சேவை நடாத்துவதற்கு கற்பிட்டித்துறையில் உள்ள படகு உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். என மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ, நி)

## 8-ம் ஆண்டுநினைவலைகள்



வீரவேங்கை தேவதாஸ்

(யோசப் நாயகம் அன்ரன் தேவராஜா)

87, கடற்கரை வீதி, குருநகர்.

தாயின் மடியில்: 17-03-1959

தாயக மண்ணில்: 16-12-1986

நீதியின் நேர் நின்று


## விசேஷ அறிவித்தல்

சிவன் மருத்துவமனை
இலக்கம் -03
சிவன்கோவில் ஒழுங்கை
சாவகச்சேரி

பல மக்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்னர் இயங்கி வந்த மருத்துவமனை திரும்பவும் டாக்டர் S. ஞானசம்பந்தரால் விரைவில் இயக்கப்படும் என்பதை எல்லோருக்கும்தயவுடன் அறியத்தருகின்றோம். நோயாளருக்கு தங்கும் இடமுண்டு.

டாக்டர் சரவணமுத்து ஞானசம்பந்தர்
(சச்சி) R.M.O
டாக்டர் திருமதி அன்னபூரணம்
(அன்னம்) ஞானசம்பந்தர்.
R.M.O

(10406)

யாழ். அடைக்கல அன்னை ஆலய

## நத்தார் தின

# விற்பனைகள்

இன்று ( 16.12.94 ) காலை
10.00 மணிக்கு ஆரம்பம்

நாளையும் (17-12-94) நாளை மறுதினமும் (18-12-94) நடைபெறும்

°° சிறுவர் °° இளைஞர் °° வளர்ந்தோர்
°° முதியோர் சகலருக்கும் உகந்த அனைத்து தேவைப் பொருள்களும்

★ சிற்றுண்டி வகைகள் ★ தித்திக்கும் குளிர்களி
★ குளிர்பானங்கள்

மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்

மாஜா ஜால வித்தைகள்

அனைத்தையும்

மலிவு விலையில்

பெற்றுக்கொள்ள இன்றே வாருங்கள்!

விளம்பர அன்பளிப்பு:

**அகிலன்** பாதணி நிலையம்
121/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-10920)

கலை ஊடக இணைய


# நினைவு கூருகின்றோம்...

## 16.12.1994

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2- ம் லெப். கல்கி** (சாமித்தம்பி குகநாதன் - காரைதீவு - அம்பாறை)

யாழ் - குருநகரில் எதிர்பாராதவிதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த,

குருநகர் பிரதேசப் பொறுப்பாளரான,

**தேவதாஸ்** (ஜோசப் அன்ரன் தேவராஜா - குருநகர் - யாழ்)

**சீலன்** (நாகரத்தினம் நவரத்தினராஜா - இராசாவின் தோட்டம் வீதி - யாழ்)

1987 ம் ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். விக்ரம்** (சண்முகம் முத்துராமன் - சேனைக்குடியிருப்பு - கல்முனை)

மன்னார் - விடத்தல்தீவுப் பகுதியில் ரெலோ முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திப,

**2- ம் லெப். முருகேசு** (மருசால் நீக்கலஸ் - கன்னாட்டி, அடம்பன் - மன்னார்)

**லுக்மன்** (சௌந்தரராஜன் கொன்சன்டேவிற் -நானாட்டான் - மன்னார்)

1988-ம் ஆண்டு அல்வாய் - நாவலடிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திப,

**மோகன்** (சோதிலிங்கம் சிவலிங்கம் -அல்வாய் தெற்கு)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு உயிர் நீத்த நாட்டுப்பற்றாளரான,

**மஞ்சுளாதேவி கனகரத்தினம்** (நாவலடி அல்வாய் வடக்கு)

மன்னார் பண்டிவிரிச்சானில் தவறுதலாக எமது பொறிவெடியில் சிக்கியதில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**அன்னக்கிளி** (பிரான்சிஸ் செபஸ்ரின் - பூநகரி -மன்னார்)

1990-ம் ஆண்டு மட்டு - புல்லுமலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**வசந்த்** (சீனித்தம்பி துரை - புல்லுமலை - மட்டு)

1992-ம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் புரலவன் - சசாங்கன்** (வெள்ளைக்குட்டி பூபாலப்பிள்ளை - தம்பலவத்தை- மட்டு)

**கப்டன் மகேஸ்** (மகேஸ்வரன் அருள்ராஜ் - உறுகாமம் கரடியனாறு - மட்டு)

**மேஜர் பூபால்** (சிவசுப்பிரமணியம் சிவகுமார்-கிறீன் வீதி -திருமலை)

**கப்டன் மகேஸ்வரன் - மகேஸ்** (குலசிங்கம் ஸ்ரீபன் டெல்மன் - உவர்மலை - திருமலை)

**கடற்புலி கப்டன் அறிவழகன்** (சந்தியாப்பிள்ளை யோன்சன் றெஜீஸ் -கடற்கரை வீதி- மன்னார்)

**கடற்புலி லெப். கலியுகன் - சலீம்** (சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார் - வல்லை வீதி அச்சுவேலி)

**கடற்புலி லெப். வெற்றி** (நடராசா சுப்பிரமணியம்- மணற்காடு- குடத்தனை - யாழ்)

யாழ்-விளான் பகுதியில் முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

ஒரு அப்பியாசக் கொப்பி.
வெற்றுப்பக்கற் 100க்கு ஒரு கவர்ச்சியான கைலேஞ்சி. வெற்றுப்பக்கற் 500க்கு ஒரு துவாய். ''மில்க்வைற்''

(சி-10909)

---

## A/L இரசாயனம்

Day Class வகுப்பு ஆரம்பம் 19.12.94 திங்கள் 8.15 காலை. ஆசிரியர்: சத்தீஸ் 108 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[10409]

---

## நூல்கள் வெளியீட்டுவிழா

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வெளியிடப்பட விருக்கும் ''சுவடுகள்'', ''இதயநாதம்'', ''எங்கள் தாய்த் திருநாடு'' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்/பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் முடிவில் தமிழீழ இசைக்குழுவினரின் இசைவிருந்தும் இடம்பெறவுள்ளது.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விசர்நாய்களின் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விசர்நாய்களினால் மக்களுக்கு ஏற்படும் ஆபத்தினை தவிர்க்குமுகமாக மேற்படிபிரதேச சபையினர் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களை பிடித்து அழிப்பதற்கான நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்ததிட்டமிட்டுள்ளனர். இதன்பிரகாரம் பொது இடங்கள், வீதிகள் போன்றவற்றில் காணப்படும் கட்டாக்காலி நாய்கள் அனைத்தையும் பிடித்துஅழித்துவிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (41)

---

87, கடற்கரை வீதி, குருநகர்.

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| **17-03-1959** | **16-12-1986** |

நீதியின் நேர் நின்று
நினைவெலாம் தாயகமதை எண்ணி
தானைத் தலைவன் அணிசேர்ந்து
தாவிப் பாயும் புலிகளுடன்
தாயகம் மீட்கும் போரினிலே
தாயக மண்ணில் வித்தாகிய ஈர்நான்காண்டில்
உமையெண்ணி உம்வழி சிறக்க பாடுகிறோம்.

(10417)

\- குடும்பத்தினர்

---


# நீங்காத நினைவின் இரண்டாம் ஆண்டு அஞ்சலி

தோற்றம்

25-10-1937

மறைவு

16-12-1992



அமரர்

## திரு A.K. குணசிங்கராசா

B.A (Cey), Dip. in Ed (Cey), M.A (Ed) Jaffna)

(முன்னாள் விரிவுரையாளர் கல்வியற்றுறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

திதி: 24-12-1994

அருவமும் உருவமுமாய் எங்களோடு இணைந்திருக்கும்
இனிய அப்பாவே!
உருண்டன இரண்டு ஆண்டுகள் அணைந்திடாது தங்கள்
நினைவுகள்
நினைவுகள் அழிவதில்லை நீண்டு கொண்டே செல்லும்
நீங்கள் ஆற்றிய ஆக்கபூர்வமான செயற்பாடுகள்
அணையாமல்
நம்மைக்காத்து நிற்கும் தங்கள் ஆசியும் அறிவுரைகளும்
நம்மை என்றும் வழி நடத்தும்.

தங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் ஆண்டவனை
வேண்டி நிற்கின்றோம்.

''கங்கா பதி''
கம்பர்மலை
வல்வெட்டித்துறை.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, மகள்
குடும்பத்தினர்

(10410)

---

### கலை ஊடக இணைய

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் இதுவரையும் பதிவு செய்து அங்கத்துவ அட்டை பெறாமல் தொழில் புரியும் வீடியோ படப்பிடிப்பாளர்கள் - ஓடியோ நாடா விநியோகஸ்தர்கள் - இயங்கும் வீடியோ நாடா நிலையங்கள் - புகைப்படதுறையினர் (வெளிப்புற படப்பிடிப்பாளர் உட்பட) அனைத்தும் இம் மாதம் 31-ம் திகதிக்கு முன்பாக கலை ஊடக இணையத்தில் பதிவு செய்து அநுமதி அட்டையை பெற்றுக்கொள்ளவும்.

★ இணையத்தில் பதிவு செய்யாதவர்கள் 1-1-1995 ஆம் திகதிக்கு பின்னர் தொடர்ந்து தொழில் செய்ய முடியாது என்பதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

★ வர்ண படச்சுருள் பிரதியாக்க முகவர்கள் (நிறுவன / தனியார்) இணையத்தில் பதிவு செய்து தொழில் அநுமதி அட்டையை பெற்றுக்கொள்ளவும்.

★ கலை ஊடக இணைய அநுமதி அட்டையின்றி புகைப்படமெடுக்கும் படப்பிடிப்பாளர்கள் (வெளிப்புற படப்பிடிப்பாளர்கள் / நிறுவனமயப் படுத்தப்பட்டவர்கள்) நிகழ்ச்சியின் போது இணைய அநுமதி அட்டை கொண்டு செல்லுதல் வேண்டும்.

★ நிறுவன மயப்படுத்தப்பட்டு வெளிப்புற படப்பிடிப்பு செய்பவர்கள், படப்பிடிப்பாளர்களின் தொகைக்கேற்ப அனுமதி அட்டையை பெற்றுக் கொள்ளவும்.

★ 25 - 12 - 1994 இற்கு முன் அங்கத்தவர்கள் 1994 ஆம் ஆண்டுக்குரிய சந்தாப்பண நிலுவைகள் செலுத்தப்படவேண்டும்.

★ அவ்வவ் மாதத்திற்குரிய சந்தாப்பணம் நிலுவை இன்றி செலுத்தாத பட்சத்தில் மாதமொன்றுக்கு 25/- ரூபா மேலதிக தண்டப்பணம் செலுத்துதல் வேண்டும்.

★ தொடர்ந்து 3மாதத்துக்கு சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மீறுபவர்கள் மீது இதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.**

\- செயலாளர்

கலை ஊடக இணையம்

(சி-10918)

---

**கடற்புலி லெப். வெற்றி** (நடராசா சுப்பிரமணியம்- மணற்காடு- குடத்தனை - யாழ்)

யாழ்-விளான் பகுதியில் முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சிற்றம்பலம்-அப்துல்லா** (நடராசா சந்திரகுமார் - தம்பலகமம் திருமலை)

1993ஆம் ஆண்டு''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய-

**2-ம்லெப். ஞானமூர்த்தி** (இராமலிங்கம் அன்பழகன் இல 32 சட்டநாதர் வீதி, நல்லூர்)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும்கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10917)

---

# எடிசன் அக்கடமி

| (யாழ் இந்து அருகில்) | (கொக்குவில் இந்து அருகில்) |
|---|---|
| 411/1, K.K.S.Rd | 27, K.K.S.Rd |
| யாழ்ப்பாணம் | கொக்குவில் |

## ஆண்டு 4 முதல் O/L வரை 2-வது புதிய பிரிவு

**ஆரம்பமாகிவிட்டது;- 12-12-1994**

★ கணித விஞ்ஞானத்தில் O/Lற்கு ஆண்டு 9 10 பாடத்திட்டமும் ஆண்டு 10ற்கு ஆண்டு 9 பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

★ ஆண்டு 8 ''இளநிலைத்தேர்வு'' வகுப்பிற்கு விசேட ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ பொறியியல், மருத்துவபீட மாணவர்களால் கணித, விஞ்ஞானத்தில் விசேட மீட்டல் வகுப்புகள் நடைபெறும்.

(சி-10905)

# காஷ்மீரச் சிக்கல் காரணமாக இன்னொரு இந்திய - பாக்கித்தான் போர்?

உடனடியாகவே போர் மூளக் கூடும் என்று கருதும் வகையில் வெளிப்படையான ஆயத்தங்கள் இருதரப்பிலும் செய்யப்படுவதாக தெரியவில்லை; இருந்த போதும் அண்மைக் காலங்களில் முன்னெப் போதையும் விட இந்தியாவுக்கும் பாக்கித்தானுக்கும் இடையில் போர் மூள்வதற்கான சாத்தியக் கூறுகள் இப்போது மிகவதிகம் உள்ளதாக கருதப்படுகின்றது. இது குறித்து பல ஊகங்களும் இப்போது அடிபடத் தொடங்குகின்றன. ஏனெனில் இரு நாடுகட்கும் காஷ்மீர் சிக்கல் தொடர்பான முறுகல் நிலை படிப்படியாக மோதல் நிலைக்கு இட்டுச் செல்வதாக அமைகின்றது. இரு நாட்டுத் தலைவர்களுமே இதுவரை தாம் காட்டிய பொறுமையை கைவிட்டு விட்டனர். அரசியல் நாகரிகம் கருதி இதுவரை அமைதி காத்தவர்கள்; இப்போது கனல் தெறிக்க எச்சரிக்கைகளை கக்குகின்றனர். அண்மையிலே பாக்கித்தான் பிரதம மந்திரி பெனாசிர் பூட்டோ அம்மையார் ''பிரிவினையின் (1947) முடிவுறாத நிகழ்ச்சி நிரல் (காஷ்மீரை இணைத்தல்) பற்றி அதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் பற்றி பேசினார். பதிலுக்கு நரசிம்மராவோ ''பாக்கித்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரின் பகுதிகளை மீட்க வேண்டிய நிகழ்ச்சி நிரல் தமக்கு உள்ளது'' என்றும் தனது வழமைக்கு மாறாக ''இனியும் பாக்கித்தானின் தலையீடு பொறுக்க முடியாது.'' என்றும் பேசினார் இவை வெறும் வெட்டிப் பேச்சுக்கள் என்றோ அல்லது உள்நாட்டில் மக்களை திசை திருப்ப, திருப்தி செய்ய பேசியவையாகவோ இச் சூழலில் கருத முடியாதுள்ளது.

## மூன்று தடவை போரிட்டவர்கள்...

ஏற்கனவே மூன்று தடவை போரிட்டவர்கள்; இனிமேலும் போரிட மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. இம் மூன்று போர்களிலும் இரு போர்கள் காஷ்மீர் பற்றியது. முதல் போர் இந்தியா சூழ்ச்சியொன்றின் மூலம் காஷ்மீரின் இந்து மன்னராகவிருந்த கரிசிங்கின் முடிவின்படி பெரும்பான்மை முசுலிம் மக்களின் விருப்பத்திற்கு மாறாக காஷ்மீரை இணைக்க முனைந்த போது வடமேற்குப் பகுதி பூர்வீக மக்கள் இ... முசுலிம் மக்கட்கு ஆதரவாக பாக்கித்தான்படைகள் 'ஒபரேசன் ஜீபிரேல்டர் (Operation Gibraltor) என்கிற பெயரில் படையெடுப்பை நடாத்திய போது மூண்டது. மூன்றாவது போரான 1971 ம் ஆண்டு கிழக்குப் பாக்கித்தான் பங்களாதேசமாக உருவாகக் காரணமான போரின் போதுதான் துண்டாடப்பட்ட காஷ்மீரின் எல்லைக் கோடு இருநாடு கட்குமிடையில் வகுக்கப்பட்டது. (Line of Control) எனப்படும் இக் கட்டுப்பாட்டு எல்லைக் கோடு பாக்கித்தான் விடுவித்த காஷ்மீர் பகுதிக்கும் (இது ஆசாத் காஷ்மீர் எனப்படுகின்றது. ஆசாத் விடுதலை) இந்தியக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஜம்மு - காஷ்மீர் பகுதிக்குமிடையில் இமயத்திற்கு ஊடாக செல்கின்றது. இவ்வெல்லைக் கோடே இன்று மோதலின் களமாக கொதி நிலையிலுள்ளது. இவ் வெல்லைக் கோட்டின் இரு புறமுமிருந்தே இந்திய - பாக் படைகள் அடிக்கடி மோதுவதும் எறிகணை வீச்சுக்கள் நடத்துவதும் வழக்கம். அதுபோலவே போராளிகள் இவ் வெல்லைக் கோட்டை கடந்து வருவதும் போவதுமாகவும் உள்ளனர். இந்தியாவோ தனது காஷ்மீர் ஆக்கிரமிப்பை மறைக்க காஷ்மீர் மக்களின் விடுதலை உணர்வை கொச்சைப்படுத்த இந்தியாவை சீரழிக்க முயலும் பாக்கின் சருவ வல்லமையுள்ள புலனாய்வு நிறுவனமான ISIயின் வேலையே இதுவென கூறி வருகின்றது, (ISI-Inter Service Intell-igence) மிக நீண்ட காலமாகவே ISI ஆப்கானுக்கு போக வேண்டியஆயுதங்களை சேகரித்து ஆப்கானிலும் பாக்கித்தானிலும் ஆசாத் காஷ்மீரிலும் 100க்கு மேற்பட்ட பயிற்சி முகாம்களை காஷ்மீர் போராளிகள் பயிற்றுவிக்க உருவாக்கி இவர்களை ஆயுதங்களோடு தனது பகுதிக்குள் அனுப்பி விடுவதாக சருவ தேசமெங்கும் பாரிய பிரசாரத்தை மிகக் கவனமாக மேற்கொள்கின்றது.' இது மக்கள் கிளர்ச்சியோ அல்லது வேறெதுவுமோஅல்ல இது இராணுவச் சீருடை அணியாதோரின் போர்'' என பாக்கை மறைமுகமாக குற்றம் சாட்டுகின்றது, ஆனால் உலகத்தைப் ... பதால் தென்னாசியாவில் மட்டுமல்ல உலகிலுமே காஷ்மீர் சிக்கல் மிக்க கவனத்தை பெறுகின்றது இதனாலே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் மட்டுமன்றி ஐ.நாவும் இச் சிக்கலில் தாம் மத்தியத்தம் செய்ய தயார் எனக் கூறி வருகின்றன இந்தியா வோ இதற்கு சற்றும் உடன்படாமல் எதற்கும் பாக்கித்தான் தான் காரணம் என்கிறது எனவே உண்மையான காஷ்மீர் நிலை எதுவென்பதே நாம் அறியவேண்டிய சங்கதி.

## காஷ்மீர் மக்கள் போராடுகிறார்கள்

காஷ்மீர் இப்போது நாளாந்தம் குருதி வடிக்கின்றது என்பதே உண்மை நிலை இந்திய. ஆக்கிரமிப்பின் தொல்லை தாங்காது அழுது செயலற்றிருந்த காலம்போய் ஆயுதம் தாங்கிப் போராடுகின்றது. 4 இலட்சம் இந்தியத் துருப்புக்களை (இந்திய இராணுவமும் BSF எனப்படும் துணை இராணுவமான எல்லைப் பாதுகாப்புப் படையும் சேர்த்து) நாளாந்தம் சந்தித்துத் தளராமல் போராடுகின்றது. தினந்தோறும் மோதல்களும், படுகொலைகளும்அங்கு சாதாரணமாகிவிட்டன. குறிப்பாக முசுலிம் போராளிகளின் உயிர் நாடியாக விளங்கும் சிறிநகர் பகுதியின் வளைந்த குறுகிய சன அடர்த்திமிக்க வலைப் பின்னல் தெருக்களிலே எந்நேரமும் தாக்கப்படலாம் என்கிற நிலையிலே இந்திய இராணுவம் மிக்க பதட்டத்துடன் உள்ளது இதன்காரணமாக நாளாந்தம் இந்திய இராணுவத்தினர் தாக்கப்படுவதும் வெறிகொண்ட இவர்கள் அக்கம்பக்கத்து மக்களை கொல்வதும் தமிழீழத்தின் கதை அங்கு தொடர்வதை நினைவு படுத்தும். 1989 இன் பின்னான 5வருடத்தில் 17ஆயிரம் பேர் அங்கு பலிகொள்ளப்பட்டுவிட்டனர். 4 இலட்சம் இந்தியப் படைகளை எதிர்த்து ஏறத்தாழ பல்வேறு குழுக்களையும் சேர்ந்த பத்தாயிரம் போராளிகள் அங்கு உள்ளதாக கணக்கிடப்படுகின்றது. இவற்றுள் 3500 போராளிகளே தக்க முறையில் பாக்கித்தான், ஆப்கான் போன்ற இடங்களில் பயிற்சிபெற்று ... போரில் பங்குபற்றிய அனுபவமுள்ள தேர்ந்த போராளிகள் எனவும் கூறப்படுகின்றது இப்போது பாகித்தானின் மறைமுகஆதரவுபெற்றஜிகாத் படை (Jihad Force) அல்ஜிகாத் கிஸ்புல்லா எனப் பல குழுக்கள் இருந்தாலும் மிகப்பலம் வாய்ந்ததும் பெரியதுமாக கிஸ்புல் முஜாகுதின் அமைப்பே (Hizbul Mujahideen) கருதப்படுகின்றது இது இசுலாமிய மதக்கோட்பாட்டு அமைப்பான யமாத்தி இசுலாமியாக் கட்சியின் இராணுவப் பிரிவேயாகும். பாக்கின் செல்லப் பிள்ளை அமைப்பு இது. இவ் வியக்கம் தோற்றம் பெற்றது 1990 அளவில்தான். ஆனால் இதற்கு முன்பே 1977 அளவிலே இந்திய அடக்குமுறையினின்று காஷ்மீர் விடுவிக்கப்பட்டு தனிநாடாக வேண்டும் என உருவாக்கப்பட்ட JKLF எனப்படும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இப்போது பாக்கின் ஆதரவை இழந்ததால் வலிமை குன்றினாலும் மக்கள் மத்தியில் நிரம்பிய செல்வாக்குள்ளதாகக் கருதப்படுகின்றது.

## இந்தியாவின் சூதாட்டம்

நான்கு இலட்சம் துருப்புக்களால் செய்ய முடியாததை தந்திரம், சதித்திட்டங்கள், ஏமாற்றுக்கள் மூலம் செய்ய இப்போது இந்தியாமுயல்கின்றது. அதுமட்டுமன்றி தனது துருப்புக்களின்மிகமோசமான மனித உரிமை மீறல்களை மறைக்கவும் சனநாயகத் திரையை இப்போது இந்தியா தூக்கிப் பிடித்துள்ளது. விரைவில் காஷ்மீரில் தேர்தல் நடாத்தப்போவதாக கூறியும் காஷ்மீர் மக்களின் சனநாயக உரிமைகளை பாதுகாக்கப் போவதாகவும் கூறத்தொடங்கியுள்ளது. இதன்மூலமே சருவதேச தலையீட்டை தவிர்க்க முடியும் என்பது இந்திய நிலைப்பாடு. ஏனென்றால் ஏற்கனவே 1948-ம் ஆண்டே ஐ. நாவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று காஷ்மீர் மக்களின் விருப்பத்தை அறிய கருத்தறியும் வாக்கெடுப்பு (குடியொப்பம்) நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளது. பாக்கித்தானோ ... இச்சதியின் முதற்கட்டமாகவே பாக்கின் ஆதரவை படிப்படியாக இழந்து வரும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியோடுதொடர்புகள் உருவாக்கும் முகமாக அதன் தலைவரும் சிறையில் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த முகம்மது யாசின் மாலிக்கை விடுவித்தது. தேர்தலில் JKLF அமைப்பை ஈடுபடுத்த முயல்கின்றது ஆனால் இம் முயற்சி இப்போது பிசுபிசுத்துப் போய்விட்டது. ஏனென்றால் விடுதலையாகி வெளிவந்த மாலிக்கோ மிக அண்மையில் 'எமது மக்கள் ஒரு போதும் தேர்தல்களில் பங்கு பற்றமாட்டார்கள் தேர்தலில் பங்குபற்ற வேண்டும் என்பதற்காகவா அவர்கள் போராடுகின்றார்கள்? அவர்கள் பிறப்பாலே கூடும் இந்திய எதிர்ப்புணர்வு உள்ளவர்கள் ஒருபோதும் அவர்களை திசைதிருப்ப முடியாது என்று கூறிவிட்டார்

பாலகுமாரன்

இந்நிலையில் இந்திய அரசு பாக்கித்தான் சார்பான ஜமாதி இசுலாமியக் கட்சியின் முதிர்ந்த தலைவரான சையத் அலிசா கிலானியை விடுவித்து பார்த்தது. அத்தோடு செல்வாக்கு மிக்கபல்வேறு இசுலாமிய கூட்டமைப்புக்களின் (All Party Hurriyat Conference) தலைவரான அப்துல் கானி லோண் என்பவரையும் விடுவித்தது. இது போதாது என்று சருவதேச மன்னிப்புச்சபையால் ''மனச்சான்றின் கைதி'' எனக் கூறப்பட்ட வயது முதிர்ந்த பிரிவினைகோரும் தலைவரான சபீர்சா (Shabir-Shah) என்பவரையும் விடுவித்தது. இவ்வாறு விடுவித்ததின் மூலம் இந்தியா எதிர் பார்த்ததிற்கு மாறாக சிறையிலிருந்து வெளிவரும் பேசாதிருந்தவர்கள்விடுதலையானவுடன் மிகக் கடுமையாக இந்தியாவை திட்ட ஆரம்பித்து விட்டனர் அப்துல் கானி லோணோ ''இந்த மோசடித் தேர்தல்களில் பங்கு பற்றவா காஷ்மீர் மக்கள் இவ்வளவு ...

## இன்னொரு மோசடித் தேர்தல்

இந்நிலையில் தேர்தல்கள் நடத்தப்பட முடியாதது என்பது முழு உலகிற்குமே தெரிந்திருந்தும் அவ்வாறு நடந்தாலும் அவை முன்பு நடந்தது போல மோசடித் தேர்தல்களாகவே அமையும் என்பதும் தெரிந்திருந்தும் இந்தியா இப்போது இன்னொரு சூழ்ச்சி மூலம் தேர்தலை அடுத்த சில மாதங்களுக்குள் நடத்தக் கூடும் எனக் கருதப்படுகின்றது. இந்தியக் கட்டுப்பாட்டுப் பகுதியான யம்மு காஷ்மீர் பகுதி பல தரப்பினரைக் கொண்டுள்ள பகுதியாகும். முன்னர் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் யம்மு பகுதி இந்து வமிச மன்னர் கரிசிங் காலத்திலே முசுலிம்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதி இணைகப்பட்டது. அது போலவே திபேத்திய புத்தர்கள் வாழும் லடாக் மலைப் பகுதியும் சேர்க்கப்பட்டது. எனவே இப்போது தென் யம்மு பகுதி இந்துக்கள் லடாக் பகுதி பௌத்தர்கள் போன்ற சிறுபான்மை மக்களைப் பயன்படுத்தி தேர்தலை நடாத்த இந்தியா முயன்றது. ஆனால் இதற்கிடையில் காஷ்மீர் விவகாரங்களுக்குப் பொறுப்பாகவிருந்த உள்துறைஅமைச்சர்சவானுக்கும் அவரது இணை அமைச்சர் ராஜேஷ் பைலட்டிற்கும் தேர்தல் பற்றிய கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தேர்தல் நடத்த முன் காஷ்மீர் பகுதிக்கு கூடியளவு தன்னாட்சி வழங்க வேண்டும் என்கிற பைலட்டின் கருத்தை மறுத்த சவானுக்கும் பைலட்டிற்கும் இடையே மோதல் முற்றவே இப்போது காஷ்மீர் விவகாரங்களை பிரதம அமைச்சரே நேரடியாக கையாளுகின்றார். இதற்கிடையில் மிதவாதிகளானபரூக் அப்துல்லா போன்றோர் ... தேர்தல் என்றவுடன் வந்து இறங்கிய பரூக் அப்துல்லாவின் வீடு அண்மையில் எறிகணை வீச்சுக்குட்பட்டது. இங்கே சொல்ல வேண்டிய செய்தி பரூக் அப்துல்லா இந்தியாவின் மோசடித் தேர்தல்களில் பங்கு பற்றியதால் செல்லாக் காசாகி விட்டார்.

இவ்வாறு காஷ்மீர் சிக்கல் இழுபறியாகி இழுபடும் நிலையில்இந்திய-பாக் மோதல்வேறு பரிமாணங்களைப் பெறுவதும் இப்போது உலகிற்கு கவலை தரும் செய்தியாகி விட்டது. மோதல் ஒன்றின்மூலமே இச்சிக்கல்கள்தீர்க்கவேண்டிய தவிர்க்க முடியாத சூழல் தோன்றுவது போலவே இப்போது தென்படுகிறது. ஏனென்றால் இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் முனைப்பு பெறும் விடுதலைப் போராட்ட அமைப்புகட்கு பங்களாதேசம் ஊடாக பாக் உதவுவதும் இந்தியாவுக்குள்ளே அதிருப்தியுற்றிருக்கும் முசுலிம் அமைப்புகட்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்க பாக். முயல்வதும் இப்போதும் வெளிவரும் செய்திகள். அது போலவே இந்தியாவும் 1970 களில் கிழக்குப் பாக்கித்தான் விவகாரத்தில் தலையிட்டு முக்திபாகினி அமைப்பை தனது மண்ணில் வைத்து பயிற்சி கொடுத்த காலம் தொட்டு இப்போது பாக்கித்தானில் சிந்து மாநிலத்தில் அரசுக்கு எதிராக சுய அதிகாரங்கள் கோரி போராடும் இந்தியாவினது புலம் பெயர்ந்த உருது மொழி பேசும் முகாஜிர் எனப்படும் முசுலிம் மக்கட்கு பலவகைகளிலும் உதவி வருகின்றது. M.Q.M. எனப்படும் (Mohajir Qaumi Movement) அமைப்பிற்கு இந்தியா தனது உளவு அமைப்பின் மூலம் உதவுவது ஒன்றும் இரகசியமல்ல. இவ்வாறாக 1947 பிரிவினை தொட்டு வன்மமும் காழ்ப்பும் நிறைந்த இரு நாடுகளாகவே இன்றுவரை இவை உள்ளன.

இதற்கிடையில் இரு நாடுகளிலுமே தோன்றும் பாரிய அரசியல் நெருக்கடிகளைத் தவிர்க்க திசைதிருப்ப போர் ஒன்றே இரண்டு நாடுகட்கும் வசதியாகவிருக்கும் என்ற கருத்தும் முன் வைக்கப்படுகின்றது. எது எப்படியிருந்த போதும் தேசியங்களை ஒடுக்க முற்படுகின்றவர்கள் இறுதியில் தாமே சிதறிப் போவார்கள் என்ப...

திற்கு மாறாக காஷ்மீரை இணைக்க முனைந்த போது வடமேற்குப் பகுதி பூர்வீக மக்கள் இதற்கு எதிராக படையெடுப்பொன்றினை மேற்கொண்ட போது -கரிசிங்கிற்கு உதவியாக நேரு படையனுப்பிய போது மூண்டது. இரண்டாம் போர் இந்தியாவின் பிடியில் சிக்கியிருந்த காஷ்மீர் பகுதியை மீட்க

போர்'' என பாக்கை மறைமுகமாக குற்றம் சாட்டுகின்றது, ஆனால் உலகத்தைப் பொறுத்தவரையில் மிகப் பிரதான கவலை இப்பகுதி பற்றியுண்டு ஏன்என்றால் இரு நாட்டிடமும் அணுவாயுதங்கள் ஏற்கனவே உள்ளன அல்லது எந்நேரத்திலும் அவற்றினை ஒன்றிணைக்கும்வல்லமை உள்ளது என்பதே உண்மை நிலை என்

முறையில் பாக்கித்தான், ஆப்கான் போன்ற இடங்களில் பயிற்சிபெற்று உறுதியான போராளிகளாக குறிப்பிடப்படுகின்றனர். இப்போது இறுதியாக ஆயிரத்திற்கு மேற்பட்ட பாக்கிலும் ஆப்கானிலும் பயிற்சிபெற்ற போராளிகள் வந்திணைந்திருப்பதாக கூறப்படுகிறது. இவர்களுள் பலர் ஆப்கானித்தானின்

ப்பம்) நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளது. பாக்கித்தானோ ஐ நாவின் செயலர் இச்சிக்கலில் மத்தியத்தராக செயற்பட வேண்டும் என ஐ. நாவை வலியுறுத்தி வருகின்றது. எனவே இப்போது தமது வழமையான தந்திரங்களை முழுமூச்சாக இந்தியா காஷ்மீரில் செயற்படுத்தத் தொடங்கிவிட்டது.

தேர்தல்களில் பங்கு பற்றவோ காஷ்மீர் மக்கள் இவ்வளவு இழப்புக்களை சந்தித்து போராடினார்கள்? என கேள்வி எழுப்புகின்றார். அண்மையில் விடுதலையான சபீர் சாவோ ''எமது மக்களின் தன்னாட்சியுரிமை ஏற்கப்படும் வரை எமது போராட்டம்தொடரும்'' என்று கூறிவிட்டார்.

அப்துல்லா போன்றோர் தாமும் தேர்தலில் பங்குபற்றுவதானால்1953க்குமுன் காஷ்மீருக்கு வழங்கப்பட்டு இருந்த விசேட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என கோருகின்றனர். இதுவரை காலமும் இலண்டனிலிருந்து விட்டு

சிதறிப் போவார்கள் என்பதற்கு வரலாறு பல சான்றுகளை கொண்டுள்ளது. இந்தியாவின் பாரிய சாமிராச்சியத்தின் வெடிப்புக்கள் இனிமேல் தவிர்க்கப்பட முடியாதவை என்பதே அண்மைய தேர்தல் முடிவுகளும் கூறும்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# சத்திர சிகிச்சை வரலாற்றில் போர்முனையில் பல சாதனைகள் புரியப்பட்டன

## மருத்துவ சரித்திரத்தில் சத்திரசிகிச்சை நிபுணர்களின் பங்களிப்பு

நெப்போலியனின் மாபெரும் இராணுவத்தில் (Napoleon's GrandArmY) பிரதம தளசத்திரசிகிச்சைநிபுணராக (Surgeon-in -Chief டாக்டர் ஜே, டி. லரி (1766-1844) பொறுப்பேற்றிருந்தார். அவர் போர் வீரர்களிடையே பெரும் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்ததினால் நெப்போலியன் நன்றிக்கடனாக அடிக்கடி பெரும் பணப்பொதிகளை அன்பளிப்பாகக் கொடுத்து கௌரவித்தான். மேலும் தான் இவரைப்போன்றஅற்புதமான மனிதரைக் காணவேயில்லை எனவும்வர்ணித்தான்' நெப்போலியனுடைய குடியரசு சந்தித்த அனைத்துக் களங்களிலும் லரியும் பங்குகொண்டார். மூன்று முறை அவர் களத்தில் காயப்பட்டார் நெப்போலியனுடைய மாபெரும் கடைசி யுத்தமான வாட்டர்லூவிற்கும் கூடவே சென்றார். மேலும்போரோடினோ (Battle of Borodino) யுத்தத்தில் ஒரே நாளில் இருநூறு சாயப்பட்ட கால்களைத் துண்டிக்கும் (Surgical Amputation) சத்திரசிகிச்சையை மேற்கொண்டார். மேலும் சத்திர சிகிச்சை பற்றி பல களங்களில் அவர் நேரடியாகப் பெற்ற தனது அனுபவத்தைக் கொண்டு எழுதிய நூல்கள் (Military Surgery) இராணுவ சத்திர சிகிச்சைத் துறையில் இன்றும் பெரும் மதிப்பையும் பலனையும் அளிக்கிறது. இவரால் தோற்றுவிக்கப்பட்ட பறந்துகாயப்பட்ட இடத்திற்குச் செல்லும் அம்புலன்ஸ்(Flying Ambu'ance) அமைப்பு தற்போது களத்தில் காயப்படும் வீரர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளித்துக் காப்பாற்றும்நவீன முறைக்கு பெரும் அடித்தளம் வகுத்தது

ஏ-ஏ-எல். எம். வேல்ப்பேயூ (1795 - 1867) இன்னுமொரு பிரபல்யமான சத்திரசிகிச்சை நிபுணராகும். சழுத்து எலும்பு முறிவுக்கு பண்டேச் கட்டுகின்ற அவர் கண்டுபிடித்த முறை இன்னும் நடைமுறையில் இருக்கின்றது.

ஜே.எவ். மல்கெய்ஜின்(1806-65) எழுதிய சத்திர சிகிச்சையின் நுணுக்கம் (Operative Surgery) பற்றிய புத்தகம் சத்திர சிகிச்சையின் வரலாற்றில் அதிகூடிய பிரதிகளையும் மொழி பெயர்ப்பையும் கொண்டதாகக் கருதப்படுகின்றது. அகஸ்ட் நிலேசன் (1807 - 73) என்பவரே மூன்றாம் நெப்போலியனின் சொந்தபிரத்தியேகசத்திரசிகிச்சை நிபுணராகும். செயற்கையாக சிறுநீர் கழிப்பதற்காக சிறுநீர்ப்பையினுள் விடக் கூடிய வளைந்து கொடுக்கக் கூடிய குழாயை [Flexible Catheter) 1860-ல் முதன்முதலில் கண்டுபிடித்தவரும் இவரேயாகும். மேலும் உடலிலுள்ள துப்பாக்கிச் சன்னங்களைக் கண்டுபிடித்து வெளியில் எடுப்பதற்கும் இக்கருவி உதவியது.

பிறக்கின்ற போது வாயில் ஏற்படுகின்ற கிளிச்சொண்டு குறைபாட்டிற்கு (Cleft Palate) சத்திரசிகிச்சை (Plastic Surgery) மூலம் டாக்டர் பி. ஜே. ருக்ஸ் (1780-1854) தீர்வு கண்டவராவார். தாடை எலும்பு, தோள் மூட்டு, கணுக்கால் மூட்டு ஆகியவற்றில்கடுமையான வியாதி ஏற்படுகின்ற போது அகற்றுவதற்கானசத்திரசிகிச்சையை (Amputation) ஜக்கியூஸ் லிங்பிராங் ( 1790 - 1847 ) கண்டுபிடித்தார். மூளையில் மேற்கொள்ளப்படும் நவீன சத்திரசிகிச்சைக்கு அடித்தளம் வகுத்தவர் போல் புரோக்காவாகும். மூளையில் வளரும் கட்டியை முதன்முதலில் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியவர். நாம் என்னத்தை பேசவேண்டும் எனக் கட்டுப்படுத்துகின்ற மூளையின் பகுதியைக் கண்டு பிடித்ததினால் இவருடைய பெயரே [Broca's Area) இதற்கு சூட்டப்பட்டுள்ளது. மூளைக்கும் மண்டை ஓட்டிற்கும் இருக்க வேண்டிய விகிதாசாரத்தை கண்டுபிடிக்கும் கருவியையும் இவரே அறிமுகப்படுத்தினார்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த எல். அப்பியா (1818-98) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்தவர்களில் ஒருவராவார். பி. லண்டி (1817-95), எவ் பலஸியானோ ஆகியோரே இராணுவ சத்திர சிகிச்சைத்துறையை (Military Surgery) உருவாக்கியதோடு யுத்த களங்களில் காயப்படும் போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பவர்கள். நடுநிலையானவர்களாக கருதப்பட்டு அவர்களுடைய முதலுதவிப் பணிக்கு இடையூறு செய்யக் கூடாது என சிபார்சு செய்தவர்கள். எரிகாயங்களுக்கு சிகிச்சை முறையாக தோலை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மாற்றி முதன் முதலில் சிகிச்சை அளித்தவர் எல். அமாபைள் என்கிற சத்திரசிகிச்சை நிபுணராகும். காலிலுள்ள வரிக்கோஸ் வெயினுக்கு (Varocosities) சத்திர சிகிச்சை மூலம் முதன் முதல் சிகிச்சை அளித்துக் காட்டியவர் ரி. ரிம்மா (1843-1877) பின்னர் ரென்டனலன்பேர்க் இம்முறையை நவீனப்படுத்தி பிரபல்யப்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்து நாட்டு டாக்டர் ஜோன் பெல்லும் (1763-1823) அவருடைய சகோதரர் சார்ள்சும் சத்திர சிகிச்சைத் துறைக்கு குறிப்பாக இரத்தக் குழாய்கள் சம்பந்தமான சத்திர சிகிச்சைக்கு அளப்பரிய பங்களிப்பைச் செய்தார்கள். இதனைத் தொடர்ந்து சேர் அஸ்றலி பஸ்றன் கூப்பர் (1768-1848) தன்னுடைய சத்திர சிகிச்சையின் ஆற்றலினால் சர்வதேச ரீதியில் புகழ் பெற்றார். அவர் பெயரில் அவர் கண்டு பிடித்த கூப்பர் தசைநார் கூப்பர் கேர்ணியா ( oopersHernia) என்பனவும் முதன் முதலில் இடுப்பு மூட்டுடன் காலை சத்திர சிகிச்சை மூலம் அகற்றிய [Amputate at the Hip Ioint) சத்திர சிகிச்சையை மேற்கொண்டார். அவருடைய மாணவனான பென்ஜமின் ரவர்ஸ் [1783- 1858] கண்வியாதிகளைப் பற்றி ஏராளமாக எழுதியவர். பேராசிரியர் ஏப்ரகாம் கொலின்ஸ் [1773-1843] கையில் மணிக்கட்டில் ஏற்படும் எலும்பு முறிவை பற்றி விபரித்தவராவார்.

பேராசிரியர் லிஸ்ற்றர் தான் தொற்று நீக்கியை அறிமுகப்படுத்தியவர். ஏனெனில் சத்திர சிகிச்சைப் புண்களுக்கு தொற்று நோய்க்கிருமிகள் ஆதிகாலம்தொடக்கம்பெரும்பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் கிப்போகிரேற்ஸ் சத்திர சிகிச்சைப் புண்களுக்கு சிறு நீரும், வினாகிரியும் பயன்படுத்தினார். மேலும் மருத்துவத்தின் தந்தை சுத்தம் பேணப்பட வேண்டியதன் அவசியம், மற்றும் ஈரலிப்பற்ற பண்டேஜ் ஐப் பற்றியும் (Drv Dressing) அறிவுறுத்தினார். 13.ம் நூற்றாண்டில் இதற்காக வைன் பயன்படுத்தினார்கள். ஆனால் பேராசிரியர் பிரபு ஜோசப் லிஸ்ற்றர் (1827-1912) கண்டு பிடித்த தொற்று நீக்கி சத்திர சிகிச்சையின் சரித்திரத்தில் அவருக்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்தது. இவரே சத்திர சிகிச்சைக்குரிய கருவிகளும் உயர் வெப்ப நிலையில் சுத்தம் செய்யப்படும். (Sterilizing) முறையையும் அறிமுகப்படுத்தினார். இவர் மருத்துவத்துறைக்குச் செய்த பங்களிப்பிற்காக இங்கிலாந்தின் பிரபுக்கள் சபைக்கு (House oF Lords) தெரிவு செய்யப்பட்ட முதல் மருத்துவப் பிரதிநிதி என்கின்ற பெருமையைப்பெற்றார். மேலும் இவர் இறந்ததும் அதி உயர் கௌரவமான இவருடைய உடல் வெஸ்ற்மினிஸ்ற்றர் பாராளுமன்ற மண்டபத்தில் இறுதி அஞ்சலிக்காக

(6-ம் பக்கம் பார்க்க)

டாக்டர் எஸ். பி. ஆர். சிர்மாறன்

சிறுகதை

# சிறுவாணம்

சே. ஆர். டேவிட்

"சந்திரசேனா வெல்லுவனெண்டு தெரியும். ஆனால் இவ்வளவு தொகையாலை வெல்லுவனெண்டு ஒருதரும் நினைக்கயில்லை...'' மரத்தடியில் குழுமி நின்றவர்களில் ஒருவர் கூறுகிறார், நேற்றைக்கு முதல் நாள் நடந்த தேர்தலின் முடிவு பற்றி கடந்த இரவுச் செய்தியில் கூறப்பட்டு விட்டது.

''நான் போன கிழமை கொழும்பிலை நிண்டனான்... சந்திரசேனாவின்ரை தேர்தல் பிரசாரக் கூட்டமொண்டுக்கு போனனான்.. சகல விஷயங்களையும் துணிவோடை பேசினான்...'' இன்னொருவர் கூறுகிறார்.

சந்திரசேனாவின் வெற்றி பற்றியும் இத்தேர்தலில் தோற்றுப் போன சிறிவர்த்தனா பற்றியும் அவர்களின் அரசியல் போக்குகள் பற்றியும் வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

அந்த மரத்தடியிலும் கடை விறாந்தையிலும் கிட்டதட்ட முப்பதுக்கும் மேலானவர்கள் நிற்கின்றனர். அத்தனை பேரும் இன்றைய பத்திரிகைக்காகக் காத்து நிற்கின்றனர்.

வீதியின் வலது பக்கமாக கடை அமைந்திருக்கின்றது. இடதுபக்கமாக ஒரு கிணறு அமைந்திருக்கின்றது. கிணற்றுக்கட்டிலில் கால்களைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருக்கின்றார் நடராசர். விறாந்தையில் நிற்கின்ற கூட்டத்தோடோ மரத்தடியில் நிற்கின்ற கூட்டத்தோடோ அவர் சேராமல் கிணற்றுக் கட்டிலில் தனியாகவே இருக்கின்றார்.

நடராசர் பத்திரிகைக்காக வரவில்லை பாண் வாங்குவதற்காகவே வந்திருந்தார். அங்குள்ளவர்களின் பேச்சுக்களை அவதானித்தபடி இருக்கின்றார்.

'சம்பளமாற்றமொண்டுவருமெண்டு தான் நினைக்கிறன்...'

'சந்திரசேனா தன்ரை பிரச்சாரத்திலை கூறினவன் தானே.. ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் சம்பளமாற்றமொண்டு வாறதுதானே.. பெரும்பாலும் வரத்தான் செய்யும்...'

'இவன்ரை ஆட்சியிலையாவது தமிழாக்களுக்கு ஒரு முடிவு வந்திதெண்டால்... எத்தினை காலத்துக்கெண்டுதான் இப்பிடிச் சீரழியிறது'' ஒருவர் தனது மனக் கொதிப்பைக் கூறிக் கொள்கிறார்.

',ஏன் தம்பி... கொழும்பிலை ஏதாலும் கலவரம் நடந்ததாமே '' அப்போது தான் அங்கு வந்த ஒருவர் கேட்கிறார்.

''பேப்பர் என்னும் வரயில்லைப் பாருங்கோ ஏதாவது நடந்திருந்தால்.. பேப்பரிலை வரும் ''

''என்னும் பேப்பர் வரயில்லையே...'' இப்படிக் கூறியவர் திரும்பிக் கடை வாசலைப் பார்க்கின்றார். அவரது கண்கள் மூர்த்தியைத் தேடுகின்றன.

கடை பூட்டப்பட்டிருக்கின்றது, அந்த சிறிய விறாந்தையின் தொங்கலில் பின்னுக்குக் கைகட்டியபடி மூர்த்தி நிற்கிறார். அவரது பார்வைக் கோடுகள் வீதியில் நீண்டிருக்கின்றது, அவர் தான் இந்தக் கடையின் ஒரே ஊழியன்.

ஆறு மணிக்கு முன்பின்னாகப் பத்திரிகைக்காரர்களும், பாண்காரனும் வருவார்கள்.

இருளும் ஒளியும் சமர் புரிந்து இருளைப் புறங்காட்டி ஒளிக்கதிர்கள் பூமியைத் தழுவத் துடிக்கின்ற நேரம்... அதிகாலை ..

கடந்த இரவு கடும்பனி தூரத்தே இன்னமும் பனிப் புகார் தெரிகின்றது, பனியில் நனைந்த புல் பூண்டுகள் குருத்துச் சரித்து நிற்கின்றன. வீதி கூட நனைந்து கிடக்கின்றது .. வீதியின் மறுகரையில் கடைக்கு நேராக நிற்கின்ற அலரி மரத்தின் இலைகளிலிருந்து, முழுகியபின் துவட்டியும் துவட்டாத நிலையிலுமுள்ள பெண்ணின் தலைமயிரின் நுனியிலிருந்து நீர்சொட்டுக்கள் சிந்துவது போல், பனித்துளிகள் சிந்திக் கொண்டிருக்கின்றன....

''இந்த குளிரையும் பொருட்படுத்தாமல் தேர்தல் முடிவுகளை அறிகின்ற ஆவல் அவர்களுக்கு..''

''இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் ஒரேவழி.. நானே வடபகுதிக்குச்சென்று பேச்சுவார்த்தை நடத்துவேன்... எண்டு சந்திரசேனா கூறியிருக்கிறான்... எனி என்ன செய்யப்போறான்... வரத்தானே வேணும்...''

சைக்கிளில் வந்து கால் பெருவிரலை நிலத்தில் ஊன்றியபடி நின்று சாமியார் கூறுகிறார்.

''...தமிழர்கள் நாய்கள் எண்டு சொன்னவை இப்ப.. தமிழர்கள் புலிகள்... எண்டு சொல்ற அளவுக்கு வந்திட்டினம்... அப்ப எங்கடை ஆக்களெல்லாம் நாயள்மாதிரி அடியும் உதையும் வாங்சிச்சுதுகள்... இப்ப உள்ளதுகள் புலியள்... தேடி வரத்தானே வேணும்..,''

'' என்ன இருந்தாலும் சந்திரசேனா தகுதியானவன் அவன் எங்கடை பிரச்சினையைத் தீர்க்கத்தான் பாப்பான் ... '' சாமியார் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

கிணற்றுக்கட்டிலிருந்து நடராசர் தலையை நிமிர்த்திச் சாமியாரைப் பார்க்கின்றார் ... உதடுகள் பிரியாத நிலையில் மொட்டானதொரு சிரிப்பொன்று உதிர்கிறது ..

சாமியார் -

கந்தசாமி' இதுதான் இவரது பிறப்புச் சாட்சிப்பத்திரத்தில் ஒட்டியிருக்கும் பெயர். பெயரைச் சுருக்கிச் சாமியார் என அழைக்கப்படுகின்றார். அரசாங்க சேவையிலிருந்த இவர், பென்சன் வயதுக்கு முன்னரே, பென்சன், எடுத்துக் கொண்டவர் சாமியாருக்கிப்போது ஐம்பத்திரண்டு வயது ஆனால் பார்ப்பவர்கள் மிகவும் குறைத்துத்தான் மதிப்பிடுவார்கள். மெல்லியவராக இருந்தாலும் திடகாத்திரமானவர்.

கருங்காலி வைரம் போன்ற உரோமக்கட்டான உடற்கட்டு கம்பளி மயிர்க் கொட்டி போன்ற மீசை, சிங்கப்பூர் சங்கிலி ... ... எப்போதுமே கலகலப்பாக இருப்பார் ... ஊர்விஷயங்கள் எதுவானாலும் முன்னிற்பார் ...

''அப்பு ... இண்டைக்கு இருபத்தைஞ்சு பேப்பர் கூடத் தரச் சொல்லி முதலாளி சொன்னவர் ... இருபத்தைஞ்சு பேப்பர் கூடவைச்சிருக்கு எண்ணி எடுங்கோ'' அங்குவந்த பத்திரிகைக்காரன் இப்படிக் கூறிவிட்டு ஒரு பத்திரிகைக் கட்டை மூர்த்தியிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து செல்கிறான்.

மூர்த்தி, அவசர அவசரமாகப் பத்திரிகைக் கட்டை அறுத்துப் பத்திரிகையை எண்ணுகின்றார் இரவல் பத்திரிகை பார்ப்பதற்கும், தேர்தல், புதினங்கள் பொறுக்குவதற்கும் வந்தவர்கள் நிற்க, பத்திரிகை வாங்க வந்தவர்கள் மூர்த்தியைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

இரண்டாவது பத்திரிகைகாரனும் வந்து பத்திரிகைக் கட்டைப் போட்டுவிட்டுச் செல்கிறான். அந்தப் பத்திரிகைக் கட்டையும் அறுத்துப் பத்திரிகைகளை எண்ணுகின்றார், மூர்த்தி,

''அப்பு கெதியாய் எண்ணி முடியுங்கோ ...''

'' அப்பு நான் எண்ணட்டே ... ''

'' அவசரப்படுத்தாதையுங்கோ... வயது போன காலம்... ஆறுதலாய் எண்ணட்டு...'' அக்கூட்டத்தில் முன்னணியில் நின்ற சாமியார் கூறுகிறார்.

முதலாளி கடைக்கு வந்து, கடையைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்க ஏழரை மணிக்கு மேலாகிவிடும் அதற்கிடையில் பத்திரிகை வியாபாரத்தையும் பாண் வியாபாரத்தையும் மூர்த்தி முடித்துவிடுவார் மூர்த்தி வயது போனவரெண்டாலும் மிகவும் சுறுசுறுப்பானவர், அதுமட்டுமல்ல மிகவும் நேர்மையானவரென்று சத்தியம் பண்ணிக் கூறலாம்.

பத்திரிகைக்காக முண்டியடித்துக் கொண்டு நிற்பவர்களைக் கிணற்றுக் கட்டில் இருந்தபடியே நடராசர் பார்க்கின்றார்...

முன்பு பார்த்த அதே பார்வை ..

அதே மொட்டான சிரிப்பு..

''அப்பு பேப்பரைத் தாருங்கோ...''

''அப்பு எனக்குமொண்டு...''

முதல் பத்திரிகையைச் சாமியார் வாங்கிக் கொள்கிறார். பத்திரிகையும் காசும் கைமாறிக் கொண்டிருக்கின்றன. பத்திரிகையை வாங்கியவர்கள் திரும்பவும் அந்த மரத்தடிக்கு வருகின்றனர்.

பிரதான வீதி, வீதியிலிருந்து வலதுபக்கமாக ஒரு கல்லுறோட்டு இடப்பக்கமாக ஒரு மண் ஒழுங்கை, 'நாற்சந்தி' என்று கூறுமளவுக்குப் பிரபலமான இடமிது இச்சந்தியில் வலதுபக்கமாக இக்கடை அமைந்திருக்கின்றது. கடைக்கு முன்னால் ஒரு மருதமரம், இது சாதாரண மரமல்ல, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கிய மரம் இந்தமரத்தடியில் மிகவும் அழகானதொரு கோயில் அமைந்திருக்கின்றது.

இந்த மருதமரத்தின் கீழ்த்தான் சகலரும் நிற்கின்றனர்.

'' கொழும்புத் தமிழர் ... மலையகத் தமிழர் ... பொதுவாக சந்திரசேனாவைத்தான் ஆதரிச்சிருக்கிதுகள்...'' தமிழ்ப்பிரதேச வாக்குகளை அவதானித்த சாமியார் கூறுகிறார்.

''அப்பு நான்தான் முதல் வந்தனான்... எனக்குப்பிறகு வந்தவையெல்லாம் பேப்பர் வாங்கிப்போட்டினம் ..''

ஒருவர் குறைபட்டுக்கொள்கிறார்.

''இந்தத்தேர்தல் முடிவுகளைப்பார்த்து என்ன தான் செய்யப்போறியளோ .. மூர்த்தி கூறுகிறார் அதுவும் உரக்கக் கூறுகின்றார் அவரது பேச்சு நடராசரின் காதுகளுக்கும் எட்டுகின்றது பாண்காரரின் வருகையை எதிர்பார்த்து வீதியைப் பார்த்துக்கொண்டிருந்த நடராசர் அதிலிருந்து விடுபட்டு... மூர்த்தியைப்பார்க்கிறார்....

இப்போது முன்பு போலல்லாமல் உதடுகள் பிரியச் சிரிக்கின்றார்...

நடராசர் -

மரத்திலேயே பழுத்துக் காய்ந்து விழுந்த செத்தல், தேங்காய் போன்ற அனுபவசாலி... இப்போது இவருக்கு எழுபத்தைந்து வயது நடக்கின்றது. இருபத்திமூன்று வயதில் உத்தியோகமாகி .. ...அதுவும் ஆங்கிலேய நிர்வாகத்தில்உத்தியோகமானவர்.. அன்று தொடக்கம் இன்று வரை எதையுமே திட்டமிட்டுத்தான் செய்வார்...

இப்போதுகூட ஒருமணிக்கு மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தாரென்றால், சகல பத்திரிகைகளையும் வாசித்து முடிப்பார்...... ஆங்கிலப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் தான் அதிகம் வாசிப்பார்.

இலங்கையில் நடந்த அத்தனை தேர்தல்களையும் தரிசித்தவர்!......!

அரசியல், வரலாற்றுப் பிரச்சினை உள்ளவர்கள், இவரிடம் வந்து பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வார்கள்.

''அப்ப... சாமியார்... பொருளாதாரத்தடைநீக்கப்பட்டு, சாமானெல்லாம் தாராளமாக வருந்தானே..'' பொருளாதார வரட்சியில் வெந்து போன ஒருவர் கேட்கிறார்.

''இவ்வளவு தமிழர்களெல்லாம் நம்பிக்கையிலை சந்திரசேனாவை ஆதரிச்சிருக்குதுகள் ... சந்திரசேனா ஏதாலும் ஒண்டு செய்யத்தானே வேணும் .....''

''அப்ப போக்குவரத்துப் பிரச்சினை......''

' மின்சாரம் தாறதுக்கான ஒழுங்குகள் நடக்கிது ..... போக்குவரத்துப் பிரச்சினை தானாய்ச் சரிவரும் .....'' சாமியார் கூறுகிறார்,

''எத்தனை கொடுமையளை அனுபவிச்சுப் போட்டம்... கொஞ்சக்காலமெண்டாலும்...... எங்கடை மண்ணிலை' வாழ்ந்திட்டுச் சாவம்...... எத்தனை ஆயிரம் புள்ளையள் உயிரை விட்டிட்டிதுகள்...... அதுக்கெண்டாலும் ஒரு கடவுள் தீர்ப்பு வேணுந்தானே..'' ஒருவர் மிகவும் வேதனைப்பட்டுக் கூறிக் கொள்கிறார்.

கிணற்றுக் கட்டிலிருந்த நடராசர் தலையை நிமிர்த்தி அங்கு நின்றவர்களைப்பார்க்கின்றார். ..

அதே பார்வை...

அதே மொட்டான சிரிப்பு...!

''தேவையில்லாமல் புடிபட்டு மறியலிலை இருக்கிற பொடியள்... எத்தினையாயிரம் பொடியள்...''

''அவங்களை இனி விட்டிடுவங்கள்...''

''அப்ப வெளிநாடுகளுக்கு அகதியாய் போனதுகளின்ரை முடிவென்ன...''

அவையளெல்லாம் திரும்பி வர வேண்டித்தான் வரும் இஞ்சை பிரச்சினையில்லாட்டி வரலாந்தானே ...''

நடராசர் தலையைக் குனிந்தபடி இருக்கின்றார், அவரது செவிப்பறை உணர்வு மட்டும் அங்கு நிற்பவர்களின் மத்தியில் நங்கூரமிட்டு நிற்கின்றது

மருதமரத்தடியில் நிற்கின்ற அனைவரும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட ஒரு சுதந்திரபூமியில் நிற்கின்ற உணர்வில் நிற்கின்றனர்...''

நடராசரின் மனதில் நடந்து முடிந்த தேர்தல்கள் படச்சுருளாய் நீண்டு கொண்டிருக்கின்றது ..

''எங்கடை ஒடர் பேப்பரைத்தாருங்கோ...'' ஒரு சிறுவன் மூர்த்தியிடம் கேட்கின்றான். மூர்த்தி அந்தச் சிறுவனை உற்றுப் பார்த்து அவனை இனங்கண்டு அதன்பின் அவனது தகப்பனை நினைவுபடுத்தி.. அதன் பின்பு தான் பத்திரிகையைக் கொடுக்கின்றார்.

பாண்காரன் வருகின்றான் மூர்த்தி பத்திரிகை வியாபாரத்தை நிறுத்திவிட்டு, பாண் பெட்டியைஎடுத்துக்கொண்டு பாண்காரனைநோக்கிவருகின்றார். பாண்காரன் கடைமதிலோடு சைக்கிளைச் சாத்திவிட்டு பாணை எண்ண ஆரம்பிக்கின்றான்.

கிணற்றுக் கட்டிலிருந்த நடராசர் அங்கிருந்து வந்து றோட்டுக்கரையோடு நிற்கின்றார்பாணைவாங்குவதற்காக வந்த இன்னும் சிலர் நடராசரோடு சேர்ந்து கொள்கின்றனர்

''தமிழர் பிரச்சினைக்கான முடிவைச் சந்திரசேனா ஏற்கனவே தீர்மானிச்சு வைச்சிருக்கிறான்...'' பேச்சுத் தொடர்கிறது.

''ஏன் அப்பிடிச் சொல்லுறியள்...''

''அவன்ரை பேச்சிலிருந்து விளங்கியது ..''

'' என்னமாதிரியான முடிவாயிருக்குமெண்டு நினைக்கிறியள் ..''

''அதைத்தான் தீர்மானிக்கேலாமல் இருக்கு ..,'

சந்திரசேனா சொல்ற முடிவு .. எங்களுக்குப் பொருத்தமில்லாட்டி...'' இக்கேள்வி அங்கு நின்ற அனைவரையும் குளப்புகின்றது சாமியார் என்ன பதில் கூறப்போகின்றாரென்று சகலரும் எதிர் பார்க்கின்றனர் ...

ஆனால் சாமியார் ? அவரால் எதுவும் கூற முடியவில்லை...

(6 ம்பக்கம் பார்க்க)

"தம்பி. ...இலங்கையிலை தேர்தல் வாக்குறிதியள் எல்லாம் பெரியதொரு சிறுவாணம் போன்றது... அது சிறயுக்கை பாக்கிறதுக்கு அழகாகத்தான் இருக்கும்...

சிறிமுடிஞ்சுதெண்டால் மின்னுகின்ற ஒவ்வொன்றும் கரிக்கட்டியாய்த்தான் நிலத்திலை விழும்...

அந்தக் கரிக்கட்டியள் பல்லுத்தீட்டக்கூட உதவாது...!" நடராசர் கூறுகிறார்.

# ஐ. சாந்தனுடன்

# ஒரு நேர்காணல்!

**வவுனியா - திலீபன்**

'எந்தவொரு தீவிரபடைப்பாளிக்கும் மூன்று செயற்பாடுகள் அவசியமென நினைக்கிறேன். அவை - வாழ்தல், வாசித்தல், எழுதுதல், எனக் கூறும் ஐ.சாந்தன் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக ஈழத்து இலக்கிய உலகில் தீவிரமாக இயங்கி வருபவர்.

சிறுகதைகள், நெடுங்கதைகள், குறுங்கதைகள், நாவல், பயணக்கட்டுரை என இவர் பல வடிவங்களிலும் சுவடு பதித்துள்ளார்.

**'THE SPARKS'** (பொறிகள்) என்ற பெயரில் ஆங்கிலத்தில் சிறுகதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

இவரது கதைகள் பல ஆங்கிலத்திலும். சிங்களத்திலும் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்ச் சிறுகதை உலகில் தனித்தடம் பதித்தவர் இவர். வடிவமைப்பில் பல பரிசோதனைகளைச் செய்து பார்த்தவர் இவர்.

ஒடுக்கு முறைக்குள்ளாகி வந்த தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு பிரச்சினைகளையும் இலக்கிய உருவில் தீர்வைச் சுட்ட முனைந்த முன்னோடி.

இவருடனான நேர்காணல் தொடர்கிறது.....

☐ நீங்கள் படைப்பாளியானதன் ஆரம்ப காலத்தைப் பற்றியும், அன்றைய-இன்றைய இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றியும் விரிவாகச் சொல்லுங்கள்...?

ஃ அறுபதுகளின் நடுக்கூற்றிலிருந்து எழுத ஆரம்பித்தேன். 'கலைச்செல்வி'யில் முதலாவது கதை பிரசுரமானது. பின்னர் கட்டுப்பெத்த தொழில் நுட்பக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதே எனது முதலாவது தொகுப்பு வெளியானது. அக்கால கட்டத்தில்-அதாவது அறுபதுகளின் பிற்பகுதியில்-கட்டுப்பெத்த மற்றும் பேராதனை பொறியியல்பீடமாணவர்களிடையேதமிழர்களின்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புரட்சிகரமான சிந்தனைகள் முளை கொள்ள ஆரம்பித்தன. இப்போக்கில் இணைந்து கொண்டது அல்லது இதன் பாதிப்பிற் குள்ளானது என்பது என்னைப் பொறுத்தளவில் தவிர்க்க முடியாததாயிருந்தது.

அன்றைக்கும்-இன்றைக்கும் இலக்கிய வளர்ச்சி சீராகவே இருக்கிறது. ஆனால் இரண்டு காலகட்டங்களுக்கிடையிலும் அவற்றின் சூழல், அனுபவம் கண்ணோட்டம் இவற்றில் பாரிய வித்தியாசங்களுண்டு. இதனால் இன்று வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளது. முக்கியமானதென்னவெனில், அன்று வாய்ப்பாடு போல 'போராட்ட' கோஷங்கள் படைப்புக்களில் இடம்பெற்றன. ஆனால்-இன்றோ 'அனுபவ வெண் சூட்'டில் பிறந்த-மெய்மை வாய்ந்த போராட்ட உணர்வுகளிலிருந்து-ஆக்கங்கள் கருக் கொள்கின்றன.


☐ நீங்கள் யாரை உங்கள் வழிகாட்டியாகக் கருதுகிறீர்கள்?

ஃ வாழ்க்கையை... நல்ல எழுத்துக்களை . .

**"இன்றைக்கு சர்வதேசமும் எம்மைப் பார்க்கும்-பிரமிப்புக் கலந்த பார்வை... இதற்கு தமிழகச் சஞ்சிகைகளும் விதிவிலக்கல்ல. இங்கிருந்து போவதெல்லாம் 'அதிவிசேஷம்' என்கிற ரீதியில் இனம் பிரிக்க முடியாமல் ஆகி விடுகிறார்கள்."**

☐ 1970களிலிருந்து உங்கள் படைப்புக்களில்தேசிய இனப்பிரச்சினை மற்றும் இன ஒடுக்கு முறை பற்றிய கருக்கள் தொடர்ச்சியாகக் கையாளப்பட்டு வந்துள்ளன. ஆனால்-இந்த இரு தசாப்தங்களிலும் உங்களிடமிருந்த உணர்வு நிலை ஒரேமாதிரியாகவே உள்ளது. இதில் முன்னேற்றம் காணவேண்டாமா என்று கேட்பவர்களுக்கு என்ன கூறுகின்றீர்கள்?

ஃ உணர்வு நிலை என்பது அதன் உச்சத்திற்கு அப்பாலும் செல்வது எப்படி? ஆனால்-புதிய சூழலின் பெறுபேறாய் வந்த அனுபவங்கள்இப்போதைய என் ஆக்கங்களில் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாதிருக்கக் கூடும். அவை பற்றிய என் நேரடி அனுபவங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. என் அனுபவ எல்லைக்கு உட்படாதவற்றை எழுதிக் கொச்சைப் படுத்தவும் நான் விரும்பவில்லை. அவற்றைப் பதிவு செய்யப் புதிய தலைமுறை எழுந்து வருகிறது. என்னைப் பொறுத்தளவில் என் அனுபவ விரிவுக்குட்பட்டவற்றை இன்னமும் நான் எழுதிக் கொண்டுதானிருக்கிறேன். வரலாற்றுப் போக்கு என்கிற அஞ்சலோட்டத்தில் என் பங்கை நான் சிறப்பாகவே ஆற்றியிருக்கிறேன் என்ற திருப்தி எனக்குண்டு. மேலும் இரண்டு தசாப்தங்கள் என்ற நீண்ட இடைவெளியில் என் உணர்வு நிலை தளர்ந்து போகாமல் ஒரே மாதிரியாகவிருப்பதே கூட நிறைவு தரும் விஷயமல்லவா? இன்னும் ஒன்று, இந்த அனுபவங்களை உள்வாங்கி இனி நான் எழுதுவதற்கான சாத்தியங்களும் நிறைவே உள்ளன.



☐ ஈழத்து எழுத்துக்கள் தமிழக எழுத்துக்களிலும் பார்க்க பின் நிற்கின்றன என்ற குரல் மீண்டும் மெதுவாக கேட்கத் தொடங்கியுள்ளதே.....?

ஃ உள்ளடக்கங்களைப் பொறுத்தவரையில், மற்றெவருமே நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு வாழ்க்கை போராட்ட அனுபவங்கள் இம் மண்ணில் சாத்தியமாகியுள்ளன. ஆனால், வெற்றிகரமான படைப்புகளாக இவற்றைத் தருவதில் நாம் எந்த அளவிற்குச் சிறந்து நிற்கிறோம் என்பது கேள்வி தான். கலைப் படைப்பாக்கம் என்று பார்க்கிற போது, தமிழகம் எம்மை முந்திக் கொண்டு நிற்பது போலத்தான் எனக்குப்படுகிறது.

☐ அப்படியானால் தமிழகச் சஞ்சிகைகள் இப்போதெல்லாம் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் கருத்துக்களையும் விழுந்தடித்துக் கொண்டு பிரசுரிக்கின்றனவே?

ஃ அது வேறு விஷயம். எங்கள் எழுத்துக்களுக்குத் தமிழகத்தில் எப்போதுமே வரவேற்பிருந்தது தான் ஆனால் சமீப காலமாக அங்கு இடம் பெறுகிற சில கருத்துக்கள் மற்றும் படைப்புக்களைப் பார்க்கிற போது இந்த அதீத வரவேற்புக்கு சில காரணங்கள் இருக்கலாமெனப் படுகிறது.

ஒன்று, இன்றைக்கு சர்வதேசமும் எம்மைப் பார்க்கும் பிரமிப்பு கலந்த பார்வை, இதற்கு தமிழக சஞ்சிகைகளும் விதிவிலக்கல்ல. இங்கிருந்து போவதெல்லாம் 'அதி விசேஷம்' என்கிற ரீதியில் அவர்கள் எங்கள் படைப்புக்கள் எல்லாவற்றையும் பார்த்து - நல்லது கெட்டது என்று இனம்பிரித்தறியமுடியாமல் ஆகிவிடுகிறார்கள்.

மற்றது, பொம்பர், குண்டு, ஷெல் என்று வந்தவுடன் அந்தச் சத்தங்களில் இலக்கியத் தரமென்பது அவர்களின் காதுகளில் விழாமல் போகக் கூடும்.

மூன்றாவதும் ஒன்றிருக்கிறது, உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழரிடையே தமது விற்பனையை முன்னெடுப்பது.

☐ நீங்களும் தானே தமிழக சஞ்சிகைகளுக்கு எழுதுகிறீர்கள் .... வெளிநாட்டு சஞ்சிகைகளுக்கு எழுதுவது அவசியம் என நினைக்கிறீர்களா?

ஃ தமிழக சஞ்சிகைகளுக்கோ அன்றி வேறெந்தப் பிரதேச சஞ்சிகைகளுக்கோ எழுதுவதில் தவறில்லை. ஒரு விதத்தில் அது அவசியமும் ஆகும் பொய்ப் பிரசாரங்கள், போலி எழுத்துக்கள் - இவைகளை முறியடித்து எமது மண்ணின் ஓர்மத்தையும் உண்மையான வாழ்க்கையையும் வெளியுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்ட இது அவசியம், தவிர, தமிழீழம் கலாசாரப் பாலைவனமாகி விடவில்லை என்பதை எடுத்துக் காட்டவும் இப்போதைக்கு சாத்தியமானது இது ஒன்றுதான்.

☐ குறுகிய வடிவமைப்பில் உரை நடை இலக்கிய உருவம் ஒன்றினை நீங்கள் பிரகடனம் செய்திருப்பதைப் போல் தெரிகிறது. அதைப்பற்றிச் சொல்லுங்கள் ...?

ஃ புதிதாக ஏதாவது செய்து பார்க்க வேண்டும் என்பதற்காக இதைச் செய்து பார்க்கவில்லை. இலக்கியமென்பது வடிவங்களுக்கு அப்பாற்பட்டது. வசதி கருதி நாங்கள் வடிவங்களையும் அவற்றிற்கு வரைவிலக்கணங்களையும் வகுத்துக் கொள்கிறோம். நான் கையாளுகிற விஷயங்களுக்கு அல்லது நான் அவற்றைப் பார்க்கிறவிதத்திற்கு என்னுடைய இந்த

(6-ம் பக்கம் பார்க்க)

# அத்திலாந்திக்கில் ஒரு சுதந்திரத்தீவு; கினியாபிஸோ ஓர் அறிமுகம்

இகினியாபிஸோ அத்திலாந்திக் சமுத்திரத்திலமைந்துள்ள வறிய மேற்கு ஆபிரிக்கா நாடுகளிலொன்று. சனத்தொகையில் தமிழீழத்தை விடக் குறைந்தது. நிலப்பரப்பில் சிறிலங்காவின் அரைவாசியையுடையது. இயற்கை வளம் குறைந்த கினியாபிஸோ கெரில்லாப் போராட்டம் மூலம் விடுதலை பெற்று இன்று ஒரு குடியரசாக விளங்குகிறது.

கினியாபிஸோவின் மொத்த நிலப்பரப்பு 36,125 சதுர கி. மீ. சனத்தொகை சுமார் பத்து லட்சம் மொழி போத்துக்கல், கினியாபிஸோ மக்கள் பாங்கு புலானி, ஆசியர் ஐரோப்பியர் ஆயிரக் கணக்கில் மதங்கள், ஆவிகளை வணங்குவோர் 60% இஸ்லாம் 35% கிறிஸ்தவம் 5% கல்வியறிவுடையோர் 5%

பெருமளவு சதுப்பு நிலத்துடன் கூடிய இருபத்தைந்து தீவுகளையும் பல ஆறுகளையும் கொண்ட ஒரு உஷ்ண வலய நாடு. யூன் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மழை வீழ்ச்சியையும் டிசம்பர் முதல் மே வரை வெப்பத்தையும் காலநிலையாக உடையது.

1446-ல் போர்த்துக்கீசரால் கினியாபிஸோ கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து போர்த்துக்கலின் குடியேற்றங்களுள் ஒன்றானது 16-ம் நூற்றாண்டு முதல் 18-ம் நூற்றாண்டு வரை அடிமை வியாபாரத்தின் கேந்திர நிலையமாக விளங்கியது கினியாபிஸோ.

கேப் வேர்ட் தீவுகளுடன் இணைந்து வர்த்தக உரிமைகளைக் கொண்டிருந்த கினியாபிஸோ 1879-ல்இவ்வொப்பந்தத்தை முறித்துக் கொண்டதுடன் தனிக்குடியேற்ற நாடானது.

1900களின் ஆரம்பத்தில் போர்த்துக்கலுக்கு எதிராக கிளர்ச்சிகள் இடம்பெற்றபோதும் போர்த்துக்கீச அரசு இவர்களை சமாதானப்படுத்தி வைத்திருந்தது. 1951 இல் போர்த்துக்கலின் வெளிநாட்டு மாகாணங்களில் ஒன்றானது.

1956இல் கினியா ஆபிரிக்க சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கெரில்லாப் போராட்டம் ஆரம்பமானது. 1963ன் பின்னர் கெரில்லாப் போராட்டம் தீவிரமடைந்தது. தீவிரவாதிகள் கினியாபிஸோவுக்கு பூரண விடுதலை வேண்டிப் போராட்டம் நடத்தினர். 1970-ல் 30,000 போர்த்துக்கீசப் படைகள் நாட்டின் மூன்றில் இரண்டு பகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன. இதனால் 90,000 மக்கள் நாட்டை விட்டு அண்டை நாடுகளுக்கு தப்பியோடினர். கினியாபிஸோவின் அப்போதைய சனத்தொகை 5 லட்சம்.

மீண்டும் கெரில்லாப் போர் தீவிரமடைந்தது. 1973செப்டெம்பர் 27ம் திகதி தீவிரவாதிகள் சுதந்திரப்பிரகடனம் செய்ததுடன் நாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். 90 நாடுகள் விரைவில் கினியாபிஸோவை அங்கீகரித்தன. 1974 ஏப்ரலில் போர்த்துக்கல்லில்இடம்பெற்ற இராணுவக் குழப்பத்தை யடுத்து புதிய லிஸ்பன் அரசு கினியாபிஸோவுக்கு சுதந்திரம் வழங்க முன்வந்தது.

1974-ம்ஆண்டுசெப்டெம்பர் பத்தாம் திகதி கினியா ஆபிரிக்க சுதந்திரக்கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் கினியாபிஸோ சுதந்திரமடைந்ததுடன் குடியரசானது. 1974 செப்டெம்பர் 17-ம் திகதிகினியாபிஸோ ஐ. நா. வில் அங்கத்துவம் பெற்றது.

தொகுப்பு: பரமேஸ்வரன்

தற்போது 160 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அரசுப் பேரவை கினியாபிஸோவை ஆட்சி புரிந்து வருகிறது. ஜனாதிபதி ஆட்சி முறையின்கீழ் இருஉப ஜனாதிபதிகளும் 18 அமைச்சர்களும் பத்து பிரதேச செயலர்களும் கொண்ட அரசாங்கம் கினியாபிஸோவை ஆட்சி செய்து வருகிறது.

விவசாயமும் மீன் பிடியும் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக விளங்குகின்றன. தற்போது இலவச பாடசாலைகளையும், மருத்துவ நிலையங்களையும்மக்கள்கடைகளையும்அரசாங்கம்அமைத்துள்ளது, தலைநகர் பிஸோவில் ஒரு சர்வதேச விமான நிலையமும், துறைமுகமும் அமைந்துள்ளன. புகையிரதப் போக்குவரத்துக் கிடையாது.

முக்கிய உற்பத்திப் பொருட்கள் பாம் ஒயில், நிலக்கடலை, மரம், மீன், கஜு, வற்றாளங்கிழங்கு, அரிசி, கால்நடை, சோளம், படையினரின் எண்ணிக்கை 9,200, 1991ல், ஐந்து பட்டாலியன்களை உள்ளடங்கிய இராணுவ படைப் பிரிவும் பத்து T34 ரக டாங்கிகளும் இராணுவத்திடம் உள்ளன. கடற்படையினரிடம் 2 River Craft உம் 4 Minor Landing Craft உம் உள்ளன. விமானப் படையினரிடம் 27 Air Craft உம் ஒரு M. i. 8 ரக உலங்கு வானூர்தியும், மூன்று உலங்கு வானூர்திகளும் இரண்டு Doriher களும் உள்ளன.

3,000 கார்களும் 2500 பிரயாணிகள் வாகனங்களும் இங்குள்ளன 3,000 தொலைபேசிகள் பாவனையிலுள்ளன. ஒரேயொரு தினசரிப் பத்திரிகை மட்டும்வெளிவருகிறது. இப்பத்திரிகை சுமார் 3,000 பிரதிகளே விற்பனையாகின்றன. 1989ல் மொத்தத் தேசிய உற்பத்தி 154 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த ஏற்றுமதி வருமானம் 14 மில்லியன் டொலர்.

## மார்கழி அழகு

சுற்றிய போர்வை விலக...
சுருக்கென்று குத்திய குளிர்,
என்னைத் தட்டி விட எழுந்தேன்.
அதிகாலை;
வெளியே வந்த போது
அரவமற்றிருந்தது தெரு.
கருப்புச் சேலை விரிப்பாய்
நீண்ட தார் வீதியில்...
என்னைப்போல் ஓரிருவர்.
மார்கழி அழகு... ''மகாலட்சுமி''
உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும்.
சும்மா சொல்லக் கூடாது
மார்கழி மாதம் பேரழகு.
எட்டு மணிவரை கட்டிலிற் கிடப்பவனுக்கு
இந்த எழில் எப்படித் தெரியும்.
நல்லூர் மணியடிக்கும் நாலரை மணிக்கு..
கொள்ளையழகு கொலுவிருக்கும்;
வாசலுக்கு வந்து பார்த்தால்...
மார்கழி அழகு 'மகாலட்சுமி'
''ஆதியும் அந்தமுமில்லா''...
பள்ளியெழுச்சிப் பாடல்கள்
ஒவ்வொன்றும் முடிய,முடிய
அந்தமணியும்;
அரோகராச் சத்தமும்,
முடியும், துணியும் முறுக்கிய கூந்தலில்
நீர் சொட்ட வந்தெழுப்பும்;
என் மனைவி அழகும்,
எல்லாம் ஒன்றாகி
மார்கழி அழகு 'மகாலட்சுமி'.

- புதுவை இரத்தினதுரை

(உயர்தர பரீட்சை '94)

# யாழ். மாவட்டத்தின் முன்னணி மாணவர்கள்


## பொறியியல்துறையில் முகுந்தன்
### (ஹாட்லி கல்லூரி)

வடமராட்சியில் புகழ்பூத்து ஒளி வீசி வளர்ந்து வந்த கல்லூரிகளில் ஹாட்லிக் கல்லூரியும் ஒன்று. இந்தக் கல்லூரி இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளாக கல்வித் தரத்தில் தனி இடத்தை வகித்து இன்றும் தளராது தக்க வைத்து கொண்டிருக்கிறது.

ஹாட்லிக் கல்லூரி ஆண்டாண்டு தோறும் பல கல்விமான்களை உருவாக்கிக்

அவர்களையும் இக்கல்லூரி பெருமகனாக்கியது.

இவர்களின் வரிசையில் இக்கல்லூரிக்கு பெரும்புகழை ஈட்டியவர் இராஜேந்திரம் முகுந்தன். இவர் அண்மையில் வெளியான க. பொ.த உயர்



யான அன்று இவர் முக்கிய விடயமாக கொழும்புக்கு புறப்பட இருந்தபோது, தும்பளை வீதியில் அவரது இல்லத்தில் பயணப்புறப்பாடு நிலையில் சென்று அவரை நெருங்கிய போது அவர் மற்றைய நண்பர்களுடன் மகிழ்ச்சியாக கதைத்துக்கொண்டிருந்தார். இவரிடம் நீங்கள் பரீட்சை எழுதிய பின்னர் உங்களுக்கு நான்கு'ஏ' பரீட்

## வணிகத்துறையில் மதிதரன்
### (கனகரட்ணம் ம. ம. வி)

பாடசாலை இழந்த மானத்தை காப்பாற்றி அதனை உயர் நிலைக்கு கொண்டு வரவேண்டியது உங்கள் கடமை என பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் எம் மீது சுமத்திய பெரும் பொறுப்பை நிறைவேற்றிவிட்டேன் என்ற வகையில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என்கிறார் கனகரத்தினம் மத்திய மகா வித்தியா

விப்பே நான்பெற்றபெறுபேற்றுக்குக் காரணம். பொருளியல் ஆசிரியர் பரீட்சைகளை நடாத்தி அதிகூடிய புள்ளி பெறும் மாணவனுக்கு பரிசில்கள் தருவார். காணும் நேரமெல்லாம் பாடசாலையின்



வர்த்தகத் துறையைப்பொறுத்தவரையில் இலகுவில் புள்ளிகளைப் பெற்றுவிடமுடியாது. நடைமுறை விடயங்கள் பெருமளவில் புகுத்தப்படும் கொழும்பு போன்ற தென்பகுதியில் இருப்பவர்களுக்கே இந்த மாற்றங்களை அறிந்துகொள்ளவும் திரட்டிக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

தென்பகுதியில்உள்ள மாண

நினைக்கவில்லை. இங்கு இவ்வளவு கஷ்டத்துடன் நாம் படித்தாலும் அது பயனற்றுப் போகிறது. பல்கலைக்கழகம் புகுவதே எமது முதல் இலட்சியமாக இருக்கின்றது. அதனால் அதி உச்ச புள்ளிகளைப் பெற வேண்டிய நிலை உருவாகிவிட்டது இம்முறை எனது சகமாணவன் ஒருவர் ஏ, 3பி எடுத்துள்ளார். இவர் மாவட்ட மட்டத்தில் 158

ண்டு தோறும் பல கல்விமான்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கல்லூரியில் கல்வி பெற்று வெளியேறியவர்களில் அதிகமானோர் அதி சிறந்த கல்விப் பெறுபேறுகளைக் கொண்டுள்ளனர்.

பல பொறியியலாளர்களையும், டாக்டர்களையும், விஞ்ஞானிகளையும் சட்டத்தரணிகளையும் விரிவுரையாளர்களையும் உருவாக்கிய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இக்கல்லூரியின் பெருமை சிறிலங்காவில் மட்டும் அல்ல உலக நாடுகளில் கூட இருந்து வருகிறது. யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்து அமரத்துவம் அடைந்த அ. துரைராசாஹாட்லிக் கல்லூரியில் வெளி



தரப் பரீட்சையில் கணித துறையில் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தைப்பெற்று கல்லூரிக்கு மேலும் புகழ் சேர்த்தவர்.

பரீட்சை பெறுபேறுகள் ... உங்களுக்கு நான்கு 'ஏ' பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்குமா என்ற தென்பு ஏற்பட்டதா என்று கேட்டதற்கு, நான்கு பாடங்களும் எழுதி முடிந்த பின்னர் எனக்கு இவ்வாறு தென்பு ஏற்பட்டது. ஆனால் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடம் பெறுவது பற்றி அப்போது சிந்திக்கவில்லை, கணிதம் என்றால் எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பாடம். இதனாலேயே நான் கணிதத்துறையை விரும்பினேன். சிறுவயதிலும் மற்றைய பாடங்களை விட கணித பாடத்தில் நல்ல புள்ளி பெறுபேறுகள் கிடைத்து வந்தன.

(7 ஆம் பக்கம் பார்க்க)

தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தகதுறை மாணவன் பேரின்பம் மதிதரன்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப்பரீட்சையில் வர்த்தகத் துறையில் அகில இலங்கைரீதியில் மூன்றாவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றுக்கொண்ட இவரை எம் வாசகர்களுக்காக சந்தித்தோம்.

பெரும் பூரிப்புடன் காணப்பட்ட அவர் பாடசாலையில் ஆசிரியர்கள் கொடுத்த ஊக்கு



பெயரை உயர்த்த வேண்டும் என்பார் இவர்போன்ற ஆசிரியர்களை மறக்கமுடியாது. பரீட்சை முடிவு வெளியானதும் என்னைவிட மகிழ்ந்தவர்கள் அவர்களே.

தென்பகுதியில்உள்ள மாணவர்களுடன் எம்மை ஒப்பிடுவது தவறானது அங்கு கற்றல் கற்பித்தல் சூழ்நிலைகள் சகலருக்கும் சாதகமாகவேயுள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் யுத்த சூழ் நிலையில் பரீட்சை நடக்குமா என்ற ஏக்கத்துடனேயே கற்க வேண்டிய நிலை இருந்து வருகிறது. அடிப்படை வசதிகளான போக்குவரத்து மற்றும் மின்சாரவசதிகள் கூட இல்லாது கற்று வருகிறோம்.

இருந்தும் இம்முறை வெளியான பரீட்சை முடிவுகளிலிருந்து எமது கல்வித் தரம் வீழ்ந்து விட்டது என எவரும் கருதுவார்கள் என

மாவட்ட மட்டத்தில் 158 ஆவதுஇடத்தில் இருக்கிறார். இப்படிக் கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்றபோதிலும் ''தரப்படுத்தல்'' என்ற அரசின் திட்டமிட்ட பழிவாங்கலுக்கு அவரும் இலக்காகிவிட்டார். உண்மையிலேயே எனக்கு அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடம் கிடைத்து விட்டது என்பதில் எவ்வளவிற்கு மகிழ்ந்தேனோ அதே அளவிற்கு நண்பனின் நிலை கண்டு வேதனையடைந்தேன். முடிவுகள் வெளியாகி பல நாட்களாகியும் அவரை சந்திக்கும் மனத்துணிவு எனக்கு இல்லாது இருக்கின்றது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# கலைத்துறையில் பிரசாந்தன்

## (யாழ். இந்துக்கல்லூரி)

கலைத்துறையில் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றதன் மூலம் தனக்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்து நிமிர்ந்து நிற்கின்றார் செல்வன் ஸ்ரீவரதராசன் பிரசாந்தன். அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தர பரீட்சையில் கலைத்துறையில் 3 ஏ, பி எடுத்ததன்மூலம் மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெற்ற இவரை சந்திப்பதற்காக அவரது இல்லத்திற்கு சென்றபோது கொழும்பு சென்று விட்டார் என்ற செய்தி கிடைத்தது.

இருந்தும் அவரது ஆற்றலை அவர் வாயால் பெறுவதிலும் பார்க்க பெற்றவர்களிடமிருந்து அறிந்து கொள்வதும் ஒரு மாறுபட்டதாக இருக்கும் என்பதால் அவரது தந்தையாரிடம் பேச்சுக்கொடுத்தோம்.

... ரே யாரும் படி, படி என்று கூறுவது கிடையாது. தானாகவே, தான் விரும்பிய நேரத்தில் ... படித்துக்கொள்வார். பதினைந்து நிமிடங்கள் கூட வீட்டில் இருந்து படிப்பது மிகவும் அபூர்வம். ஆயினும் படித்துக் கொண்டிருக்கும் போதே படிக்கும் விடயத்தை மிகவும் தெளிவாகக்



கற்று அப்படியே உள்வாங்கிக் கொள்ளும் திறமை அவரிடம் இருந்தது. அதுவே அவரது சித்திக்குக் காரணம் என நான் கருதுகிறேன்.

கோப்பாய் நாவலர் பாடசாலையில் ஆரம்ப கல்வியைக் கற்ற அவர் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி கூடுதலான புள்ளிகளைப் பெற்றதன் மூலம் யாழ் இந்துக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார். அங்கு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6டி, 2சி பெற்றதன் மூலம் உயர் தர வகுப்பிற்கு செல்ல தகுதி பெற்றார். மகன் பொறியியல் மாணவனாக வரல் வேண்டும் என்பதே எனது நெடுநாள் ஆசையாக இருந்தது. ஆனால் அவர் எனது விருப்பத்திற்கு மாறாக கலைத்துறையில் பயில முற்பட்டார். நீண்ட நாட்களாக எனக்கும் மகனுக்குமிடையே இது குறித்த கருத்து முரண்பாடுகள் இருந்து வந்தன. இறுதியில் அவர் தனது விருப்பப்படியே தானாகவே சென்று கலைப் பிரிவில் அமர்ந்து கொண்டார். பாடசாலை அதிபரிடம்நான் சென்று இது பற்றி கதைக்க முற்பட்ட போது அவர் மகனின் விருப்பத்திற்கு இடையூறாக இருக்க

(7 ஆம் பக்கம் பார்க்க)

சந்திப்பு:
சசீகரன்
(சிவகுணபாலன்)
யோகரட்ணம்

# மருத்துவத்துறையில் ஜானகி

## (விக்னேஸ்வரா கல்லூரி)

ஊரில் இருந்து எமது மக்கள் மருத்துவ வசதிகள் இன்றி படும் அவலங்களைக் கண்டு அதற்கு என்னால் இயன்றவரை உதவவேண்டும் என்ற இலட்சியத்துடனேயே விஞ்ஞானத்துறையில் புகுந்து கொண்டேன் என்கிறார் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவியான ஜானகி பொன்னம்பலம்.

1994 ஆகஸ்ட் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி மாவட்ட ரீதியில் உயிரியல் துறையில் முதலிடத்தைப்பெற்று பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பைத் தட்டிக்கொண்ட செல்வி ஜானகியைப் பாடசாலையில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மிகவும் அமைதியான சுபாவமுடைய அவரை அணுகி ஈழநாதம் ஊடாக மாணவர் உலகிற்கு தங்களை அறிமுகப்படுத்த விரும்புகிறோம் என்ற எமது நோக்கினை வெளிப்படுத்தியதும் மகிழ்வுடன் எமது கேள்விக்கணைகளுக்கு பதிலளித்தார் அதனை இங்கு பிரசுரிக்கிறோம்.

கரவெட்டி நாவலர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில ஆரம்ப கல்வியை ஆரம்பித்த நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின் ஆண்டு ஏழு முதல்



விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்விகற்றேன். சாதாரண தரம்படித்துக்கொண்டிருக்கும் போது ஏற்பட்ட நிகழ்வுகள் என்மனதை உறுத்தியதைத் தொடர்ந்து டாக்டராக வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. அன்றுமுதல் விஞ்ஞான பாடத்தை விரும்பிக் கற்கத் தொடங்கினேன் சாதாரண தரம் பரீட்சையில் எட்டு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை (8டி) பெற்றேன்.

அதன் பின்பும் மற்றவர்கள் உயர்கல்விக்காக நகரப் பாடசாலைகளை நாடிய போதும் நான் எனது பாடசாலையிலேயே தொடர்ந்து பயின்றேன் பாடசாலையில் எமக்கு நான்கு பாடங்களில் இரண்டிற்கு மட்டுமே நிரந்தர ஆசிரியர்கள் இருந்தார்கள், அதனால் தனியார் கல்வி நிலையத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது, பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப் பட்டவர்கள் எமக்கு இருந்த ஆசிரியர் பற்றாக் குறையை போக்க முன் வந்தார்கள், அவர்களின் உதவியுடன் கல்வியைத் தொடர்ந்தோம்.

பரீட்சைக்கு முற்பட்ட காலப்பகுதியில் வடமராட்சியில் 'ஊற்று' நிறுவனம் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து விரிவுரைகளையும் பரீட்சைகளையும் நடாத்தியது இந் நிறுவனம் நடத்திய பரீட்சையில் தோற்றிய பின்பு தான் கல்வியில் எனது நிலையை நான் உணர்ந்து கொண்டேன் விலங்கியல் பாடத்தில் எவ்வளவு தூரம் பின் நிற்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ள அந்த பரீட்சை ஓர் அளவு கோலாக அமைந்து விட்டது. அதன்பின்பே விலங்கியலில் கூடிய கவனம் செலுத்தி ஊன்றிப் படித்தேன்.

பாடசாலைகல்வியுடன் தனியார்கல்விநிறுவனமும் பெரும் பங்காற்றியது என்பதை மறுக்க விரும்பவில்லை. பாடசாலையில் ஆய்வுகூட வசதிகள் உள்ளன. பெரியளவில் சகல வசதிகளும் அங்கு இல்லாத போதிலும் அடிப்படை வசதிகள் இருந்தன. அதன் மூலமும் எனது கல்வியை வளம்படுத்திக் கொண்டேன். தூர இடங்களுக்கு சென்று கல்வி கற்பதை நான் என்றுமே விரும்பியது கிடை

(7 ஆம் பக்கம் பார்க்க)

# நன்றி நவில்கின்றோம்

கடந்த வியாழக்கிழமை (8-12-94) அன்று கிளாலிப் படகோட்டியினால் திருடப்பட்ட எனது பணத்தையும், பொருட்களையும் தமது அயராத முயற்சியினால் மீட்டுத்தந்த பளை காவல்துறையினருக்கு உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த க. கிருபாகரன் ஆகிய நான் எனது நன்றி கலந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். வளர்க தமிழீழ காவல் துறையினரின் சேவைகள்,

சந்தை வீதி,
உடுப்பிட்டி-
க. கிருபாகரன்
(10403)


# ஆறாண்டு நினைவினிலே



செல்வி
## கனகரத்தினம் மஞ்சுளாதேவி

தாயின் மடியில் 1968-04-07
தாயக விடிவில் 1988-12-16

ஆசை மகளே அன்புச் செல்வமே
உன் மதிமுகம் கண்முன் காவியமாகி
ஆண்டுகள் ஆறு ஆனதம்மா
நாட்டுக்காக புறப்பட்டு,
எட்டப்பர் கூட்டத்தின் மத்தியில்
மானத்தை காக்க வேண்டுமென்று
மஞ்சு நீ!
நஞ்சதனை அருந்தி
உயிரை மாய்த்தாயே
உன் ஈடில்லா இழப்பு
எம்மில் ஈட்டிபோல் பாயுதம்மா

## சத்திர சிகிச்சை

வைக்கப்பட்டது. அவர் கிளாஸ்க்கோவில் பயன்படுத்திய வாட், இலண்டனிலுள்ள மருத்துவ தொல் பொருட் காட்சிச்சாலையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. (Wellcome Historical Medical Museum in London)

அமெரிக்காவில் டாக்டர் பிலிப்சைங்பிஸிக்(1768-1805) என்பவரே அமெரிக்காவின் சத்திர சிகிச்சைத் தந்தை (Father) என அழைக்கப்படுகின்றார்.

1805-ல் பெனிகலவேனியா பல்கலைக்கழகத்தின் ('University of Penneylvania) முதலாவது சத்திர சிகிச்சைப் பேராசிரியராக முதன் முதலில் பதவி வகித்தார். சத்திர சிகிச்சையின் மூலம் செயற்கையான மலவாசலை '(Artificial Anus) உருவாக்கியவர் அன்று அமெரிக்காவின் பிரதம நீதியரசர் மார்சலுக்கு பித்தப்பையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறிய கற்களை அகற்றிய சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு மிகவும் பிரபல்யம் அடைந்தார். பொஸ்ற்றனிலுள்ள ஜோன் வரன் (1753-1815) என்கிற சத்திர சிகிச்சை நிபுணர் அமெரிக்கப் புரட்சியின் போது போராளிகளுக்குப் பெரும் சேவை புரிந்ததுடன் அமெரிக்கா 1776-ல் சுதந்திரம் பெற்றதும் உலகில் இன்று மிகவும் கௌரவமான பல்கலைக்கழகமாகக் கருதப்படுகின்ற ஹவாட் பல்கலைக்கழகத்தில் (Havard University) மருத்துவக் கல்லூரியை நிறுவியவர். இவருடைய சகோதரர் ஜோன் கொலின்ஸ் வரன் (1778-1856) மஸ்ஸஸூட்ஸி லுள்ள பொதுமருத்துவமனையை (1820) நிறுவியவர். இவர்கள் ஏராளமான சத்திர சிகிச்சை நூல்களையும் எழுதியுள்ளார்கள்.

மருத்துவத்துறைக்கு அமெரிக்காவின் இன்னொரு மாபெரும் பங்களிப்பு மயக்க மருந்தைக் கண்டுபிடித்ததாகும். 'அனஸ்தீஸியா('Anaesthesia எனப் பெயரிட்டவர் ஓ.டபிள்யூ ஹோம்ஸ் என்பவராகும் மூளையில் முதன் முதலில் வெற்றிகரமாக சத்திர சிகிச்சையை (Neurosurgery) மேற்கொண்டவர் பேனெற்றும், கோல்டீஸ்ம் ஆகும். அமெரிக்காவில் ஹார்வே குஷ்ஸிங் (1869 - 1939) மேற்கொண்ட மூளை சத்திர சிகிச்சை மிகவும் நவீன முன்னேற்றமுடையது. இருதயத்தை முதன் முதலில் வெட்டிப்பார்த்த (Surgery of Heart) இத்தாலிய சத்திர சிகிச்சை நிபுணரான கைடோ பாரினோ என்பவராகும் இருதயத்தில் கத்தியால் குத்திக் காயப்பட்ட நோயாளியின் இதயத்தைச் சத்திரசிகிச்சை மூலம் தைத்தார். ஆனாலும் முதல் நோயாளி இறந்து விட்டார். அதனைத் தொடர்ந்து ஜேர்மனியில் பிராங் போர்டில் லூயிஸ்ரென் (1840-1930) அதேபோன்று கத்தியால் இருதயத்தில்குத்தப்பட்டு36 மணித்தியாலங்களின் பின்னர் வந்த நோயாளியை சத்திர சிகிச்சை செய்து காப்பாற்றினார். ஏழரை வயதுள்ள குழந்தையின் இதயத்தில் 1938 ஆகஸ்டில் பொஸ்ற்றன் நகரில் ரொபேற் இ. குரோஸ் வெற்றிகரமாக சத்திர சிகிச்சையை மேற்கொண்டார். மார்பில் முதல் முதலாக பேர்லினைச் சேர்ந்த பேர்டினன்ட் சாவ்ரூ (1875) வெற்றிகரமான சத்திர சிகிச்சையை மேற்கொண்டார். (Surgery of the Chest) வயிற்றுப்பகுதியில்வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்ற நவீன சத்திர சிகிச்சைக்கு அடித்தளம் போட்டவர் வியன்னாவைச் சேர்ந்த தியடோர் பில்ரொத் என்பவராகும்.

மற்றும் சத்திர சிகிச்சையின் போது காயப்பட்டவருக்கு இரத்தம் ஏற்றுவது தான் சத்திர சிகிச்சைத்துறையில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவில்கிளிவ்லெண்டின் ஜோர்ஜ் சேர்க்கில் தான் இது பற்றிய முன்னோடியாக இருந்தாலும் 1913-ல் பொஸ்ற்றனில் ஏ. ஆர். சிம்ட்டன், ஜே.எச். பிரவுண் ஆகியோரே ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு குழாய் மூலம் இரத்தம் ஏற்றினார்கள். பின்னர் இதில் ஏற்பட்ட பாரியமுன்னேற்றம்2-ம் உலக மகாயுத்தத்தின் போது களத்தில் காயப்பட்ட போர் வீரர்களுக்கு இரத்தம் ஏற்றியும் பின்னர் சத்திர சிகிச்சையின் போதும் இரத்தம் ஏற்றியதனால் பல்லாயிரக் கணக்கானோரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இன்னும் இந்த முறையினால் காயப்பட்டவர்களுக்கும், சத்திர சிகிச்சையின் போதும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள், ஏனைய நோயாளிகளுக்கும் இந்த முறை பெரிதும்உதவுகின்றது.

## காஷ்மீரச்

செய்தியாகியும் விட்டது. எனவே இந்நிலையில் காஷ்மீரில் தேர்தலொன்றை திணிப்பது பாரிய பின் விளைவுகளை இப் பிராந்தியம் முழுவதுமே ஏற்படுத்தும் என பல தரப்பாலும் அஞ்சப் படுகின்றது. ஆனால் மேலாண்மை எனும் ஆதிக்க வெறியுள் அமிழ்ந்திருக்கும் இந்தியா ஆளும் வர்க்கத்திற்கு இவ்வுண்மைகள் உறைக்கும் போது காலம் கடந்து போயிருக்கும்!

## சீறுவாணம்

நடராசர்... அதே பார்வை... அதே மொட்டான சிரிப்பு...

''என்ன நடராசண்ணை உங்கடை அபிப்பிராயத்தைச் சொல்லுங்கோவன் ', சாமியார் நடராசரைக் கொழுக்கி போட்டிழுக்கிறார்... நின்றவர்களெல்லோரும் நடராசரைப் பார்க்கின்றனர்...

நடராசரின் பேச்சில் நிதானமிருக்கு என்பது சகலருக்குந் தெரியும்...

நடராசர் குனிந்து நிலத்தைப் பார்க்கின்றார். இந்த நிலத்தின் சோகவரலாறுகளும் .. நடந்து முடிந்த அனைத்து தேர்தல்களும் .. முரல் மீன்களாய் அவரது இதயத்தைக் குத்திக் கிழிக்கின்றன...!

''அண்ணை .. நான்கேக்கிறதென்னண்டால்... இவ்வளவு பெரிய தியாகங்களைச் செய்து போட்டு, எங்களுக்குப் பொருத்தமில்லாததொரு முடிவைச் சந்திரசேனாதந்தால் .. அதை ஏற்றுக் கொள்ளலாமா... இதைத் தான் நான் கேக்கிறன்...'' முதல் சாமியாரிடம் கேள்வி கேட்டவர், இப்போது நடராசருக்குத் தனது கேள்வியை விளக்குகின்றார் ....

நடராசர் தலையை நிமிர்த்திக் கேள்வி கேட்டவரைப் பார்க்கின்றார் அனைவரும் நடராசரைப் பார்க்கின்றனர் மூர்த்தி அவர் கூடப் பத்திரிகை வியாபாரத்தை நிறுத்தி விட்டு நடராசரைப் பார்க்கின்றார்... தூரத் தூர நின்றவர்கள் சிறுகச் சிறுக முன்னேறி நடராசரை அண்மிக்கின்றனர்...
...தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

வாலிபர்களை ஆயுதம் ஏந்த விடமாட்டேன் ..
...பொருளாதாரத் தடை

## ஐ. சாந்தனுடன்

இலக்கிய வடிவம் தானாகவே பொருந்தி வருகிறது. இந்த வடிவத்திலமைந்த என் ஆங்கிலக் கதைத்தொகுதி பற்றிக் குறிப்பிடும் போது,புனைகதைத் துறையில் புதிய வடிவமொன்றின் முன்னோடி அது எனப் பிரபல விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

☐ நீங்கள் சர்வதேசியவாதியென பல விமர்சகர்களாலும் கருத்துக் கூறப்பட்டுள்ளது. இதே நேரம் தமிழீழப் போராட்டத்தோடும் நீங்கள் உங்களை இனங்காட்டியுள்ளீர்கள், இது எப்படி?

°° தேசமே இல்லாமல் என்ன சர்வதேசீயம்?

☐ சம கால இலக்கியப் படைப்புகள் எப்படி இருக்க வேண்டும் என கருதுகிறீர்கள்?

°° ஏற்கனவே ஒரு பதிலில் இது கொஞ்சம்வருகிறது. உள்ளடக்கங்களைப்பற்றி எமக்குப் பஞ்சமேயில்லை. உலகமே பிரமிக்கும் உன்னதங்கள் இந்தமண்ணில் நிகழ்கின்றன இவை கலைப்படைப்பாக்கங்களாகவும் அமைதல் வேண்டும்.

எந்தவொரு தீவிரப்படைப்பாளிக்கும் மூன்று செயற்பாடுகள் அவசியமென நினைக்கிறேன். வாழ்தல், வாசித்தல், எழுதுதல், 'வாழ்தல்' என்பது 'இருத்தல்' அல்ல; வாழ்வு என்பதன் மெய்யான அர்த்தத்தில் அது அமைய வேண்டும். எழுதுவதை நெறிப்படுத்த உலகத் தரம் வாய்ந்த இலக்கியங்களைப் பயிலுதல் முக்கியம்.

☐ ஈழத்து படைப்பு நிலையை மேலும் வளர்ச்சிப் படுத்த - வலுப்படுத்த என்ன செய்யலாம் என்பது பற்றிய உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்?

°° தரமற்றநூல்களின் வருகை தடை செய்யப்பட வேண்டும்; விமர்சனத்தில் பாரபட்சமற்ற புறநிலை நோக்கு வேண்டும் எழுதுபவர்கள் சூழ்லைச் சுரண்டி வாழாமலும், சமூகத்தின் பால் தமக்குள்ள கடப்பாட்டை மறக்காமலும் தம்மனச் சாட்சிக்கு சரியென்றுபட்டதை எழுத வேண்டும்.


# பேரஸ்கோ ஆதரவில்,

கட்டிட நிர்மாண நிதிக்காக
யாழ் மிட்-ரவுண்றோற்ரறக்ற் கழகம்
மின்னொளியில் நடாத்தும்

## கராத்தே இறுதிப் போட்டிகள்

காணத் தவறாதீர்கள்

★ இடை நிறுத்தப்பட்டிருந்த போட்டிகள் யாவும் மீண்டும் நடைபெறவுள்ளன.

★ மண்ணிறப் பட்டிக்கான சண்டைப் போட்டிகளுடன் போட்டி ஆரம்பமாகும்.

இடம்: யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடமைதானம்
காலம்:- மார்கழி 17-ம், 18-ம் திகதிகளில்
மாலை 6.00 மணிக்கு

அன்பளிப்பு:- 20/, 50/-, 100/-,
சிறுவர்களுக்கு 10/-

★ அழைப்பிதழ் வழங்கப்பட்ட அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்
யா. மி. றோ. க.

(10411)



# விசேட அறிவித்தல்

யாழ் மாவட்ட



பருத்தித்துறை நகராட்சிமன்றம்
மாட்டிறைச்சிக் கடைக் குத்தகைக்கான
# கேள்வி அறிவித்தல்-1995

உன் ஈடில்லா இழப்பு
எம்மில் ஈட்டிபோல் பாயுதம்மா

உன்பிரிவால் துயருறும்
**தாய், சகோதரர்கள்,**
**உற்றார், உறவினர்கள்,**
**நண்பர்கள்.**

நாவலடி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(10404)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



நெஞ்சம் குளிர
27. 11. 1949

நெஞ்சம் வேக
17. 11. 1994

அமரர்

## சிவகுரு நவரத்தினம்

(கனகா றேடர்ஸ் உரிமையாளரும்,
பிரபல பத்திரிகை முகவரும்)
திருநெல்வேலி.

**திதி: 16. 12. 94**

அன்பிலே சிறந்தவராய், பண்பிலே உயர்ந்தவராய், நேர்மை தவறாதவராய், கடமை வீரராய் வாழ்ந்து எம்மை வழி நடாத்திய அன்புத் தெய்வமே எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் இதயத்தில் என்றென்றும் வாழ்வீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (16.12 94) எமது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

கனகா இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

(சி-10915)

---

யாழ் மாவட்ட
வணிக கழகங்களின் இணையம்

கொழும்பிலிருந்து கப்பல் ஊடாக யாழ் மாவட்டத்திற்கு சகல துறைப் பொருட்களை தருவிப்போர்க்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்

காலம்: 17-12-1994 (சனிக்கிழமை)
நேரம்: மு. பகல் 10 மணி
இடம்: இல. 8, மணிக்கூட்டு கோபுர வீதி
(மகாத்மாகாந்தி வீதி), யாழ்ப்பாணம்.

குறிப்பு: அ) கப்பல் போக்குவரத்துக்கான ஒழுங்கு பற்றி ஆராய்வு
ஆ) அனைத்து வணிகர்களும் தத்தமது விபரக்கோவையை இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னதாக வணிக கழகங்களில் சமர்ப்பிக்கவும்.

நன்றி

(10407) -செயலாளர்

---


உதவி ஆசிரியர்

## தெரிவுப் பரீட்சை

பயிற்சி வகுப்பு

மேற்படி பரீட்சைக்கான
★ பொது உளச்சார்பு
★ பொது அறிவு
★ மொழி அறிவு
வகுப்புக்கள்

**ஆரம்பம்: 19. 12. 1994**
**(காலை 10. 00 மணி)**

ஆசிரியர்: திரு. அ. குமாரவேல்

★ அச்சடித்த பாடக் குறிப்புக்கள் வழங்கப்படும்

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி-10906]


---

ஏந்த விடமாட்டேன் .
...பொருளாதாரத் தடை நீக்கம்
... . போக்கு வரத்துப் பாதை திறப்பு......
... . மின்சாரவசதி... .. ..
சந்திர சேனாவின் தேர்தல் பிரசாரங்கள் ...
'தம்பி ...... இலங்கையிலை தேர்தல் பிரசாரங்கள் எல்லாம் பெரியதொரு சீறுவாணம் போன்றது ... அது சீறயுக்கை பாக்கிறதுக்கு அழகாகத்தான் இருக்கும். ...
... சீறி முடிந்ததெண்டால் ......மின்னுகின்ற ஒவ்வொன்றும் கரிக்கட்டியாய்த்தான் நிலத்திலை விழும்.....
...அந்தக் கரிக்கட்டியள் பல்லுத்தீட்டக்கூட உதவாது...'
நடராசர் இப்படிக் கூறிவிட்டுப் பாண் வாங்குவதற்காகச் செல்கின்றார்.

அனைவரும் மௌனமாக நிற்கின்றனர்.

---

## கேள்வி அறிவித்தல்-1995

மேற்காட்டிய குத்தகை சார்பில் 01-01-1995-ம் திகதி தொடக்கம் 31-12-1995-ம் திகதி வரைக்கான காலப் பகுதிக்குரிய கேள்விகள் 27-12-1994-ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் இதே தினம் முற்பகல் 11.00 மணி வரை மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா 150/-ம், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 1500/-ம் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

இக்குத்தகைக்கான ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 114400/- ஆகும்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 09-12-1994

(சி-10914)

---


## Basic Language In Computer - For Students

G. C. E. O/L மாணவர்க்கான விசேட
செய்முறையுடன் கூடிய
பயிற்சிநெறி

காலம்: 3 மாதம் கட்டணம்: மாதம் 450/-

**ஆரம்பம்: 16 - 12 - 1994**

விபரங்கட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. PETER'S LANE
JAFFNA

(சி-10912)

# இனப்பிரச்சினையும் இந்திய அரசும்; சந்திரிகாவிற்கு எதுவரை அனுமதி

இனப்பிரச்சினை தொடர்பாக இன்று இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? இன்றுஇது ,பலராலும் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்றாகவுள்ளது. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காணப்போவதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை இதுவரை எதிர்த்து வந்த இந்திய அரசு இதனை எவ்வாறு பார்க்கின்றது/அணுகுகின்றது என்பது முக்கியமாகின்றது.

வெளிப்படையான பேச்சில் இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். ஆனால் இந்தியாவைப் பொறுத்து ஐக்கிய இலங்கைக்குட்பட்டதான தீர்வு என்பதே அதன் விருப்பாகும். ஆனால் இந்தியா இதுவரை மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளை உற்று நோக்கின், 1987ஆம் ஆண்டில் உருவான இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாட்டிற்கு உட்பட்டதாகவே சமாதானத்தீர்வு இருக்க வேண்டும் என்பதும், இதில் விடுதலைப்புலிகள் இயக்கம் புறந்தள்ளி வைக்கப்பட வேண்டும் என்பதே அதன் விருப்பமாக இருந்து வந்துள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் சிறிலங்கா ஆட்சிக் கட்டில் ஏறியது. மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின்படி விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதான ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.ஆகையினால், விடுதலைப்புலிகளுடன் ஏதோ ஒருவகையில் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு உள்ளதெனலாம். இதில் பிரச்சினைக்குத்தீர்வு என்பது இரண்டாம் கட்ட நிலையே ஆகும்.

இந்தவகையில் தான், விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முன்னர், 'இந்தியாவின் நிலைப்பாடு' முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதன் அடிப்படையில் சிறிலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையும், இனப் பிரச்சினை விவகாரத்தால் தீர்மானிக்கப்படும் அம்சமாக மாறியது.

இதேசமயம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம், இந்தியா அரசாங்கத்துடன் மிக நெருக்கமான உறவைப் பேணுவதற்கான அடித்தளத்தை இடுவதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றது. இது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கடந்த கால ஆட்சியின்போதும் வெளியுறவுக் கொள்கையின்ஒரு முக்கிய அம்சமாக இருப்பினும், தற்போதைய நெருக்கமானது புதிய அரசியற் சூழ்நிலையை அனுசரித்த கொள்கையுமே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், இறுதி நேரத்தில் இந்தியாவிடம் பூரணமாக சரணாகதி அடைந்தாயினும், முன்னர் நடந்து முடிந்த கசப்பான அனுபவங்கள், நெருடல்களாகவே இருந்து வந்தன. இந்நிலையில், சிறியளவு இடைவெளிகளும், சந்தேகங்களும் இருக்கத்தான் செய்தன.

கொள்கையையே இந்தியாவிடம் கொடுத்தது போன்றதாகும்.

இந்த வகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் இந்திய விஜயம் தொடர்பான விவகாரமும் நோக்கப்படவேண்டியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்த பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், தனது முதல் வெளிநாட்டு விஜயம் இந்தியாவிற்கே என நாசுக்காகத் தெரிவித்திருப்பினும், அது எவ்வேளையிலுமோ மிகவிரைவிலோ மேற்கொள்ளப்படலாம் என்றே தெரிவிக்கவில்லை.

ஆனால், தற்பொழுது இடம்பெறும் நடவடிக்கைகள், வெளியாகும் செய்திகள் சந்திரிகா குமாரதுங்கா விரைவிலேயே இந்தியா செல்லத்திட்டமிட்டிருந்தார் என்பதை வெளிக்காட்டுபவையாகவே இருந்தன. இது தொடர்பான தகவல்களும் முடிந்தளவில் மறைக்கப்படுவதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டன எனலாம்.

ஆனால், இன்று இதுகுறித்த விடயங்கள் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில், சந்திரிகா குமாரதுங்கா ஏப்ரலில் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டிற்கு முன்னதாகவே இந்தியா செல்லலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இது இந்திய - சிறிலங்கா உறவு உயர்மட்ட ரீதியில், மிக ஒருமைப்பாட்டுடன் அந்நியோன்னியத்துடன் பேணப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டும் முக்கியமானதொரு குறியீடாகும்.

இந்தவகையில், இனப்பிரச்சினை தொடர்பான விடயமும் - குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விடயமும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் விஜயத்தின்போது இந்தியாவுடன் தீவிரமாக அலசப்பட்

**ஜெயராஜ்**

டிருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இவ்விவகாரத்தைசிறிலங்கா வெளிவிவகார அமைச்சரும், இந்தியத் தலைவர்களும் மிக ஆழமாக மனம் விட்டு ஆராய்ந்தார்கள் என்பது அவர் தற்பொழுது வெளியிட்டுக் கொண்டிருக்கும், அறிவிப்புக்களுமே வெளிக்காட்டுபவையாகவுள்ளன.

இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய உயர் தலைவர்களுடன் பேச்சுநடத்திய சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் வெளியிடும் தகவல்களின்படி, இந்தியா விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எந்தவித முட்டுக்கட்டையும் போடவில்லை என வலியுறுத்தப்படுகின்றது.''விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததை இந்தியப் பிரதமர் வரவேற்றுள்ளார். பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டும் என அவர்விரும்புகிறார், இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதானது எமது பிரச்சினை ஒன்று தீர்வது போன்றது'' என இந்திய பிரதமர் தன்னிடம் தெரிவித்ததாக லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிக்கின்றார்.

இந்தியாவைப் பொறுத்து இனப்பிரச்சினைவிவகாரத்தில் இரண்டு விடயங்கள் முதன்மையானவை. ஒன்று இந்திய மாநிலங்களின் உரிமைகளுக்கு அப்பாற்பட்ட அளவில் அல்லாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பது. அடுத்தது, தனித்துவமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் ஏனைய குழுக்களுடனும் பேச்சு நடத்த வேண்டும் என்பதாகும்.

ஒருவகையில் கூறப் போனால் இந்திய - சிறிலங்கா சமாதான உடன்பாட்டிற்கு உட்பட்டதான தீர்வு ஒன்று காணப்பட்டால் போதுமானது என்பதாகும். இதற்கு ஆதரவு வழங்க இந்தியாவும் தயாராகவே இருந்து உள்ளது.

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கமும், இந்தியாவிற்கான உறுதிமொழிகளையும் வழங்குவது இலகுவானதாகவே இருந்திருக்கும். ஏனெனில், பொ. ஐ. முன்னணி இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை என்பதோடு வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுயாட்சியுடன் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமா என்ற கேள்வியும் பலமாகவே உள்ளது. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு சிங்களவர் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வே முன்வைக்கப்படும் என்பது சந்திரிகா அரசின் அறிவிப்பாகும்.

இந்தவகையில் இந்தியாவுடன் ஒரு உடன்பாடு காண்பது பெரும் சிக்கலுக்குரிய தொன்றாக இருக்க மாட்டாது. விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைஇந்தியஅரசிற்கு விருப்பளிக்கும் ஒன்றாக இருக்க மாட்டாது என்றாலும், இந்தியாஇவ்விடயத்தில் சிறிதுவிட்டுக்கொடுப்புக்கு தயாராக வந்திருக்க முடியும்.

ஆனால், விடுதலைப்புலிகள் விவகாரத்தில் இந்தியாவின் கொள்கைகளில் பெரும் மாற்றம் எவையும் ஏற்பட்டுள்ளதா என்றால் அதற்கு இல்லை என்பதற்கான ஆதாரங்களே உள்ளன. இதற்கு ''முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியா அனுப்புமாறு சிறிலங்கா அரசை இந்திய அரசு கேட்க உள்ளது''என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா கூறியிருப்பது சிறந்த உதாரணமாகும்.

இந்தவகையில் பார்க்கும்போது, இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா அரசின் 'நட்பு'ரீதியான கீழ்ப்படிவிற்காக அதனை சற்று நகர்வதற்கு இடம்கொடுத்துள்ளதென்றே கூற வேண்டும். ஆனால், இது எல்லைககு உட்பட்டது என்றே கருத இடமுண்டு. இது சிறிலங்காவிற்கு போதுமானதும் கூட.

ஆனால், இது சிறிலங்கா அரசிற்குத் தெரியாத விடயமல்ல. இந்தியாவுடன் சிறிலங்கா அரசும் கூட்டாக மேற் கொள்ளும்ஒரு நடவடிக்கை என்று கூட வேண்டுமானால்கூறலாம். ஆகையால்இதுசிறிலங்காவிற்குச் சங்கடம் அளிக்கும் விடயமாகவும் இருக்க மாட்டாது. .ஏனெனில், சந்திரிகா அரசாங்கமும் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தெளிவாகக் கொண்டிருக்க வில்லை என்பது மட்டுமல்ல,இராணுவ அழுத்தத்திற்கும் பணி

## தனியார் நிறுவனங்களில் கழிவு அகற்ற நடவடிக்கை

[குருநகர்]

தனியார் நிறுவனங்களில் எதிர்வரும் ஜனவரி தொடக்கம் கழிவுகள் அகற்றும் நடவடிக்கையை யாழ் மாநகர சபை வாகனப் பராமரிப்பு மேற்கொள்ள இருக்கிறது.

உழவு இயந்திரங்கள் மூலம் செய்யப்படும் மேற்படிவேலைகளுக்கு நிறுவனங்களில் இருக்கும் கழிவுப் பொருள்களின் அளவுக்கு தகுந்த வாறு கட்டணம் அறவிடப்படுமென வும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஒப்பந்தங்களை உணவுச் சாலைகள், பாடசாலைகள். வைத்திய சாலைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் பலசரக்குக் கடைகள், தொழிற் சாலைகள், வெதுப்பகங்கள் முகவர்களிடம் இருந்து யாழ். மாநகர சபை ஊழியர்கள் பெற்று வருகின்றனர். [21]

## பொறியியல்

எனது கல்வி வளர்ச்சிக்கு யோகாசனப் பயிற்சியும் ஒரு காரணம் இப்பயிற்சியை நான் பெற்றுக் கொண்டதற்கு பின்னர் ஞாபக சக்தி வளர்ந்தது. கிரகித்தல், அவதானித்தல் என்பனஏற்பட்டதனால்படிப்பில் கூடுதல்கவனம் ஏற்பட்டது.

நான் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் வரை தனியார் கல்வியை நாடவில்லை. கல்லூரியில் கல்வியையே தொடர்ந்தேன் நான் இந்தளவு தூரம் கல்வியில் கிடைத்த வெற்றிக்கு கல்லூரி அதிபர் திரு.க.நடராசா மற்றும் ஆசிரியர்கள் பெரிதும் உதவினர் என்றார்.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. க. நடராசா அவர்களை கல்லூரி அலுவலகத்தில் வைத்து சந்தித்து அகில இலங்கை ரீதியில் கணிதத் துறையில் இரண்டாவது இடத்தைப் பெற்ற மாணவன் இராஜேந்திரம் முகுந்தன் பற்றி கேட்ட போது,

எமது கல்லூரிக்கு புகழை ஏற்படுத்திய இந்த மாணவன் நல்ல திறமைசாலி. ஆழமாக சிந்திக்கின்ற திறமையும் கொண்டவர். இவர் கல்லூரிக்கு ஒழுங்காக வருவது மட்டும் அல்ல பாடங்களையும் தவறாமல் கிரகித்துக் கொள்வார் மற்றைய மாணவர்களுக்கு முன்உதாரணமாகத் திகழ்ந்தார்.

இவர் ஆங்கில அறிவு உள்ளவர் ஆங்கில புத்தகங்களைப் படிப்பதில் அதிக அக்கறை கொண்டவர். உடற்பயிற்சியில் ஆர்வம் குறைந்திருந்தாலும் சதுரங்க விளையாட்டில் ஒரு வீரர்.

இவரிடத்தில் அமைதி,ஒழுக்கம், நன்னடத்தை என்பன முக்கிய நல்ல குணாதிசயங்களாக இருந்தன. மாணவ முதல்வராகவும் இருந்தார் பாடசாலை ரீதியாக நடைபெற்ற ஆங்கிலப் போட்டியிலும் பரிசு பெற்றிருந்தார்.

இக்கல்லூரி இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டபோதிலும் கல்வித்தரம் தளர்ச்சி அடையவில்லை. ஆசிரியர்கள் தங்களை மாணவர்களுக்காக தியாகம் செய்தவர்கள் மாணவர்கள் மீது கல்வியில் கொண்ட அன்பினால் இக்கல்லூரியின் கல்வித்தரம் மேலும் உயர்ந்துள்ளது

இக்கல்லூரியில் கணிதத் துறையில் மாணவர்கள் தகுதி பெறுவது குறைவானாலும் கணித பாடத்தில்இக்கல்லூரி உச்சப் புள்ளியை பெற்றுள்ளது. மாவட்ட மட்டத்தில் முதல் பதினொரு இடங்களில் கணிதத்தில் இக் கல்லூரி ஐந்து இடங்களைப் பெற்றிருக்கிறது.

வருடா வருடம் இக் கல்லூரியில் இருந்து வர்த்தகத் துறைக்கு 90 வீத மாணவர்களும், கணிதத் துறையில் 65 வீத மாணவர்களும்,உயிரியல் துறையில் 85 வீத மாணவர்களும் தகுதி பெற்று வருகின்றனர்.

இம் மாணவனின் தந்தையாரும் ஒரு பொறியியலாளர் இவரும் தந்தையைப்போன்று உயர்வடைய வேண்டுமென்று வாழ்த்துகிறேன் என்றார்.

## மருத்துவத்

யாது. காலையில் எழுந்து கற்கும் பழக்கம் சிறுவயதிலிருந்தே என்னிடம் இருந்ததில்லை. இரவில் ஏழு மணிமுதல்

பத்தையும் உரிய முறையில் பயன்படுத்தி அறிவை வளர்க்க தயங்கேன் என்கிறார் ஜானகி பெருமையுடன்.

அமைதியாக அருகில் அமர்ந்து செவிமடுத்திருந்த அதி

கொள்கையின்ஒரு முக்கிய அம்சமாக இருந்து தற்போதைய நெருக்கமானது புதிய அரசியற் சூழ்நிலையை அனுசரித்த கொள்கையுமே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், இறுதி நேரத்தில் இந்தியாவிடம் பூரணமாக சரணாகதி அடைந்தாயினும், முன்னர் நடந்து முடிந்த கசப்பான அனுபவங்கள், நெருடல்களாகவே இருந்து வந்தன. இந்நிலையில், சிறியளவு இடைவெளிகளும், சந்தேகங்களும் இருக்கத்தான் செய்தன. ஆனால், பொ. ஐ. மு. அரசாங்கமோ அவ்வாறான நெருடல்கள், இடைவெளிகள் கூட ஏற்படாமல் இந்தியாவுடன் 'நட்புறவை' இறுக்கமான நிலையிலேயே வைத்துக்கொள்ள தீவிரமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

மிகப் பெரிய அண்டை நாட்டுடன் சிறிய நாட்டின் நட்புறவென்பது பொதுவாகவே பணிந்து போதல் என்பதன் வேறுபதமே அதுவாகும். இந்தவகையில், இந்தியாவின் மேலாதிக்கத்தை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்றே கூறமுடியும்.

இதற்கு ஒரு சிறப்பான உதாரணமாக இரணவிலவில் அமையவுள்ள அமெரிக்கா வானொலி ஒலிபரப்பு நிலையம் - வொய்ஸ் ஒப் அமெரிக்கா - பற்றி இந்தியாவுடன் சிறிலங்கா வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உரையாடியதாகும். இது ஒருவகையில் சிறிலங்காவின் வெளியுறவுக்கின்றது. ''விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததை இந்தியப் பிரதமர் வரவேற்றுள்ளார். பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டும் என அவர்விரும்புகிறார், இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதானது எமது பிரச்சினை ஒன்று தீர்வது போன்றது'' என இந்திய பிரதமர் தன்னிடம் தெரிவித்ததாக லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறாக, கதிர்காமர் இனப்பிரச்சினை விவகாரத்தில்இந்தியா காட்டும் நல்லெண்ணத்தை வெளிப்படையாகக் கூறிக்கொண்ட போதிலும் இந்தியா இதுகுறித்து பெரிதாக பேசுவதாகத் தெரியவில்லை, இது நரசிம்மராவின் வழமையான மௌனமா? அன்றி, இந்திய இராணுவம் இலங்கை மண்ணைவிட்டு வெளியேறிய பின்னர் கடைப்பிடித்துவரும் மௌனத்தின் தொடரா? எனவும் தெரியவில்லை.

ஆனால், சிறிலங்கா மிக நெருங்கிய நட்புப் பாராட்டும்நிலையில். இந்திய அரசாங்கம்இனப்பிரச்சினைவிவகாரத்தில்சிறிலங்காஅரசாங்கத்தின்முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடப் போவதில்லை என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கின்றதுபோல் தெரிகின்றது. ஆனால், இதற்காக சிறிலங்கா இந்தியாவிற்கு வழங்கிய உறுதிமொழிகள் என்ன என்பது முக்கியமான விடயமாகவே இருக்கும்.

ஆனால், இது சிறிலங்கா அரசுக்குத் தெரியாத விடயமல்ல. இந்தியாவுடன் சிறிலங்கா அரசும் கூட்டாக மேற்கொள்ளும்ஒரு நடவடிக்கை என்று கூட வேண்டுமானால்கூறலாம். ஆகையால்இதுசிறிலங்காவிற்குச் சங்கடம் அளிக்கும் விடயமாகவும் இருக்க மாட்டாது. .ஏனெனில், சந்திரிகா அரசாங்கமும் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தெளிவாகக் கொண்டிருக்கவில்லை என்பது மட்டுமல்ல,இராணுவ அழுத்தத்திற்கும் பணிந்துசெயற்படுவதால், இந்தியாவின் விருப்பிற்கும் மேலாக கூடுதலான ஒரு சுயாட்சித் திட்டத்தை முன்வைக்கவோ அதன் மூலம், விடுதலைப் புலிகளுடனான நெருக்கம் வலுவடையும் என்றோ எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை.

அத்தோடு உலகின் பல பாகங்களிலும் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ள நிலையில் அதற்கு முட்டுக்கட்டைபோட்டு குழப்புவதன் மூலம் தனக்குக் கெட்ட பெயரை சம்பாதிக்க இந்தியா விரும்பாமல் இருக்கவும் கூடும். ஆனால் அமைச்சர் பட்டியாவின் அறிவிப்பானது இவையாவற்றையும் மீறி இனப் பிரச்சினையில் கடிவாளத்தை தனது கையில் எப்பொழுதும் வைத்திருக்க இந்தியா விரும்புவதையே காட்டுகின்றது. இதன் மூலம் சிறிலங்கா அரசின் ஓட்டம் இந்தியாவின் வட்டத்திற்குட்பட்டதாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கத் தேவையில்லை.

## வணிகத்

சாண் ஏற முழம் சறுக்கும் நிலையே இன்று தமிழீழமாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தன்நம்பிக்கையும் விடா முயற்சியும் இருந்தால் எதிலும் வெற்றி பெற முடியும் என்பதை என் பாடசாலை வாழ்க்கையில் நான் உணர்ந்துள்ளேன்.

என்னுடைய பெறுபேற்றுக்கு பாடசாலை, தனியார் கல்வி நிலையம், ஈழநாதம் பத்திரிகை போன்றவற்றை காரணமாகக் கூறலாம். பாடசாலையில் ஆசிரியர்களின் தனிப்பட்ட ஊக்குவிப்புடன் வர்த்தக நூல் நிலையமும் இருப்பதை குறிப்பிடலாம். நான் எனக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்களில் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவேன். அங்கு எமக்குப் பயன்படக் கூடிய வகையில் பல புத்தகங்கள் உள்ளன. அவற்றை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்வேன்.

இதைவிட தனியார் கல்வி நிலையத்திலும் கற்றேன்,இரு இடங்களில் கற்பதால் இடையூறுகள் இருக்கவில்லை- இரு இடங்களையும் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தினேன். மேலும் தேவையான நடைமுறை விடயங்களை ஈழநாதம்ப்த்திரிகையின் மாணவர் அரங்கிலிருந்து திரட்டிக் கொண்டேன். மாணவர் அரங்கை ஒழுங்காக திரட்டிக் கற்றுக்கொண்ட ஒரு மாணவன் கடந்த பரீட்சையில் இருபது புள்ளிகளை மிகச் சுலபமாகப் பெற்றிருப்பான் என்பதில் ஐயமில்லை. நாளாந்தம் ஏற்படும் மாற்றங்களைத் திரட்டி மாணவர் அரங்கில் பிரசுரித்தால் வருங்கால வர்த்தக துறை மாணவர்களுக்கு அது பெரும் உதவியாக இருக்கும் எனக் கருதுகிறேன். அத்துடன் பரந்துபட்டளவில் ஆக்கங்கள் திரட்டி வெளியிடுவதனால் பலருடைய விளக்கங்களைப் பெற அது உதவியது.

நான் அதிகாலையில் எழுந்து கற்பது கிடையாது. அதற்கு எனது உடல் நிலையே காரணம். இரவில் பதினொரு மணிவரை கற்பேன். ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்ற நான் ஆண்டு ஆறு முதல் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத் திலேயே கல்வியைத் தொடர்ந்தேன். சாதாரண பரீட்சையில் 5 டி, சி, 2 எஸ் எடுத்தேன். கணிதமே எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பாடம். இருந்தும் எனது சகோதரர்கள் வர்த்தகத்துறையில் கல்வி கற்றமையால் எனது உயர் கல்விக்கு பக்கபலமாக இருப்பார்கள் என்பதால் நானும் வர்த்தகத் துறையைத் தேர்ந்தெடுத்தேன். கல்வியுடன் பாடசாலை உயர்தர மாணவர் மன்ற தலைவராகவும் இன்ரறக்ற் கழக உறுப்பினராகவும் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு ஓரளவு பங்களிப்பை வழங்கியுள்ளளேன். நாடகத்துறையில் ஆர்வம் உள்ளது. இது வரை ஐந்து நாடகங்களில் நடித்துள்ளேன்.

பல்கலைக்கழகம் புகவேண்டும் என்ற எனது இலக்கை அடைந்து விட்டேன். பல்கலைக்கழக கல்வியை முடித்தாலும் தொடர்ந்தும் மேலே படிக்க திட்டமிட்டுள்ளேன். இது எனது தாயாரின் பெரு விருப்பமும் கூட என்றார்.

## கலைத்

வேண்டாம் என என்னைப் பணித்ததுடன் அவன் சாதனை படைப்பான் என என்னைத் தேற்றினார். அவர் சொற்படி இன்று மகன் சாதனை படைத்திருப்பது பெருமைக்குரியதே. சிலவேளை என் விருப்பப்படி அவர் கணிதத்துறையில் கற்றிருப்பின் அவரது எதிர்காலமே பாழாகிப் போயிருக்கும்.அந்தப் பாவம் என்னைச் சார்ந்திருக்கும்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே மேடைப்பேச்சுகளில் முதல் பரிசுகளைப் பெற்று பல தங்கப் பதக்கங்களையும் தட்டிக் கொண்டுள்ளார். இது அவரது இன்றைய புகழுக்கு அடித்தளமாக அமைந்துவிட்டது.

தற்போது யாரும் அவருடைய விருப்பத்திற்கு தடையாக இருப்பதில்லை பாடசாலை கல்வியுடன் தனியார் கல்வியையும் அவர் நாடியிருந்தார். ஒவ்வொரு துறையிலும் பிரபல்யமான ஆசிரியர்களை அணுகித்தனது கல்வியை வளர்த்துக்கொண்டார். கல்விக்கு ஒதுக்கும் நேரத்தை விட மேடைப்பேச்சுகளுக்கே கூடுதலான நேரத்தை செலவிட்டுவரும் அவர் தற்போது தன்னைக் கலைத்துறையிலேயே கூடுதலாக ஈடுபடுத்தி வருகிறார். பாடசாலையில் சிரேஷ்டமாணவ தலைவராக இவர் இருந்துவருவதும் எமக்கு பெருமையாகவுள்ளது. எதிர்காலத்தில் பல்கலைக்கழகக்கலைத்துறைப் பேராசிரியராக வர வேண்டும் என்பதே அவரது நீண்ட காலக் கனவாக இருந்து வருகிறது. அவருடைய கனவு நனவாகும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம் என்றார் அவரது தந்தையார்.

## பரீட்சை முடிவு

### சென்சாள்ஸ் மகாவித்தியாலயம்

கலை

சிறந்த பெறுபேறு:
பி. றெஜிஸ் 2பி, 2சி

ஏனைய பெறுபேறுகள்;
பி, சி, 2எஸ் - 1
பி, 2சி - 1
பி, 2எஸ் - 1
சி, 3எஸ் - 1
சி, 2எஸ் - 1
4 எஸ் - 1

தோற்றியோர் - 9
சித்தி - 7

(சி)

### கட்டுப்பாடு

விநியோகம் செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. விலை குறைப்பிற்குரிய சகல சிக்கல்களையும் நீக்குவது பற்றி அரசாங்கத்தால் ஆராயப்பட்டுள்ளது. (தி)

## மருத்துவத்

யாது. காலையில் எழுந்து கற்கும் பழக்கம் சிறுவயதிலிருந்தே என்னிடம் இருந்ததில்லை. இரவில் ஏழு மணிமுதல் பத்துமணி வரையுமே படிப்பிற்காக செலவிடுவேன்.

பரீட்சை எழுதிமுடிந்ததும் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெறுவேன் என்ற நம்பிக்கை எழுந்தது. ஏனைய பிரதேச மாணவர்களின் கல்வித் தரத்தை எடை போட்டுக் கொள்ள எனக்கு வாய்ப்பு இல்லாது போனதால் மாவட்ட ரீதியில் முதலிடம் கிடைக்கும் என்ற சிந்தனையே என் மனதில் எழவில்லை.

என் சகோதரர்கள் இருவர் மருத்துவ, பொறியியல் துறைகளில் கற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் அவர்கள் இங்கு இல்லாததால் கல்வியில், அவர்களது உதவி எனக்குக் கிடைக்காது போய்விட்டது. அந்த வகையில் நான் துரதிஷ்டசாலி என்றே கூறலாம்.

இந்தக் கல்லூரியில் சிறந்த பெறுபேறுகள் வராமைக்குக் காரணம் சாதாரணதரம் கற்று சித்தியடைந்தவர்கள் உயர்கல்விக்காக நகரப்பாடசாலைகளை நாடியோடுவதும், கற்பிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பதுமே என நினைக்கிறேன், விஞ்ஞானத் துறை வளர்ச்சியடையாமைக்குக் காரணம் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் கூட கலைவர்த்தகத்துறைகளை நாடுவதே. ஒரு சிலர் மட்டுமே மற்றைய துறைகளை நாடுகின்றனர்.

பல்கலைக்கழக கல்வியை முடித்துக் கொண்டதும் எனது சொந்த மண்ணில் சேவை செய்வதையே எனது இலட்சியமாகக் கொண்டுள்ளேன். ஊரோடு இருந்து மக்கள் வைத்திய வசதியின்றி படும் துன்பங்களை நேரில் உணர்ந்து கொண்டவள் நான். புலமைப்பரிசில் கிடைத்து வெளிநாடு சென்று பயிலும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் எனது மண்ணின் தேவை கருதி அந்த சந்தர்ப்பத்தையும் உரிய முறையில் பயன்படுத்தி அறிவை வளர்க்க தயங்கேன் என்கிறார் ஜானகி பெருமையுடன்.

அமைதியாக அருகில் அமர்ந்து செவிமடுத்திருந்த அதிபரிடம் அவரது மாணவிபற்றி கேட்டபோது கடந்த காலங்களிலும் எமது பாடசாலை பல சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. இருந்த போதிலும் உயிரியல் துறையில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றது இதுவே முதல் தடவை என்பதில் பெருமையடைகிறேன்.

எமது பாடசாலை ஜனவரியில் பவள விழாவினைக் கொண்டாட இருக்கும் வேளையில் இம் மாணவி நிகழ்த்திய சாதனை அதற்கு மகுடம் சேர்த்து நிற்கிறது. இவர்களது குடும்பம். கல்விக் குடும்பம். இவரது கல்வி சீரானது. பரீட்சைக்கென கற்பது கிடையாது. சிறந்த ஒழுக்கமும் அமைதியான சுபாவமும் கொண்ட இவர் எமது பாடசாலை மாணவிகளின் சிரேஷ்ட மாணவ தலைவி என்பது குறிப்பிடப்பட வேண்டியது. இவர் பாடசாலை உயர்தர மாணவ மன்ற செயலாளராகவும் விளங்குகிறார். இவரது உயர் நிலைக்கு பாடசாலையே காரணம் என நான்கூறவரவில்லை. கல்வித்திணைக்களம் செய்து தரத்தயங்கியதை பழையமாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சபையும் முன்னின்று செய்து கொடுத்தன. முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இருக்கவில்லை அதனால் எமது கல்லூரியில் கற்று பல்கலைகழகத்திற்கு தெரிவான இரு பழையமாணவர்களே இலவசமாக தாவரவியல், விலங்கியல் பாடங்களை கற்றுக் கொடுத்தார்கள். தற்போது 'புலமைப் பரிசில் நிதியம்' ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள், இதன்மூலம் எமது பாடசாலையிலிருந்து சித்தியடைந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களின் உயர்கல்விக்கு புலமைப் பரிசில்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை வருங்காலமாணவர்கள் தமது கல்வியை வளர்த்திட ஓர் ஊக்குவிப்பாக அமையும் என்றார்.



# பெரும் உணவு நெருக்கடியில் மன்னார்த் தீவினுள் மக்கள்

மன்னார்த் தீவிற்கு உடனடியாக அத்தியாவசிய உணவுப் பொருள் அனுப்பப்படாவிடின் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மன்னார்த் தீவில் இருந்து எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மன்னார்த் தீவினுள் அத்தியாவசியப் பொருள்கள் களஞ்சியங்களில் தீர்ந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடி நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் களஞ்சியங்களில் ஒருதொகுதி உணவுப் பொருட்களை சேமித்து வைப்பதற்கும் உடனடியாக உணவுப் பொருள்கள் மன்னார்த் தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்டால் மாத்திரமே அத்தியாவசிய உணவுப் பொருள் பற்றாக்குறையால் ஏற்படவிருக்கும் நெருக்கடியைத் தவிர்க்க முடியும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (இ)(நி)

# மா.சபை உறுப்பினர்வீட்டில் 3 ஆட்டோக்கள் தீக்கிரை

(மாத்தறை)

தென் மாகாணசபை உறுப்பினர் அப்துல்வமி ஹம்மாதுவின் வீட்டில் மூன்றுஆட்டோ வண்டிகள் தீக்கிரையாக்கப் பட்டுள்ளன. வீட்டோடு இணைந்துள்ள கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது அவை தீக்கிரையானதாகவும், இது விஷமிகளின் செயலாக இருக்கலாம் எனவும் மேலும் கூறப்படுகிறது

இதனால் ஏழுலட்சம் ரூபா வரை சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிட்டுள்ள பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கற்பிட்டி- மன்னார் படகுச்சேவை

# படையினரின் பாதுகாப்பின்றி நடாத்துவதற்குத் தடை

கற்பிட்டி மன்னார் படகுச்சேவை கடற்படையினரின் பாதுகாப்பு இன்றி நடத்த வேண்டாம் என கடற்படையினர் கூறியுள்ளனர்.

மன்னார் தீவுக்குள் செல்லும் சகல தரைப்பாதைகளும் சிறிலங்கா இராணுவத்தினரால் மக்கள் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து மக்கள் கற்பிட்டியில் இருந்து மன்னாரிற்கு கடல் மார்க்கமாக பயணம் செய்ய ஆரம்பித்தனர். மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் இப் படகுகள் மூலமே கொண்டு சென்றனர்.

இப் படகுச் சேவையை கடற்படையினரின் பாதுகாப்பு இன்றி நடாத்த வேண்டாம் என கடற்படையினர் படகு உரிமையாளரிற்கு கூறியுள்ளதாக மன்னார் பகுதியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ,நி)

# இந்திய அமைச்சர் 18பேர் ராஜினாமா சமர்ப்பிப்பு

(டில்லி)

இந்திய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த 18 அமைச்சர்கள் தங்களது இராஜினாமா கடிதங்களை பிரதமர் நரசிம்மராவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அமைச்சரவையை பிரதமர் நரசிம்மராவ் மாற்றியமைப்பதற்கு வசதியாக தாங்கள் இராஜினாமா செய்ய முன்வந்ததாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய எஃகுத்துறைத் தலைவர் சந்தோஷ் மோகன் தேவ் தலைமையில் இப் பதினெட்டு அமைச்சர்களும் நேற்று நரசிம்மராவைச் சந்தித்து தங்கள் இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்தனர்

# முன்னாள் பா. உ. ஒருவரை 3 வருடமாக காணவில்லை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், 1956 ஆம் ஆண்டின் பண்டாரநாயக்க அமைச்சரவையில் பிரதி நிதி, விவசாய அமைச்சராக இருந்தவருமான முதியான்சே தென்னக்கோன் என்பவரை கடந்த மூன்று ஆண்டுகளாகக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

இது பற்றி அவரது குடும்பத்தினர் கூறுகையில்; கடந்த 1991 டிசம்பர் 11ஆம் திகதியன்று நிக்கவரட்டியாவிலுள்ள அவரது வீட்டிலிருந்து குருநாகல் நோக்கிப் புறப்பட்ட அவர் பின்னர் வீடு திரும்பவில்லை எனத் தெரிவித்தனர்.


இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

மகாத்மா நெல்லியடி

தெய்வேந்திரா சாவகச்சேரி

ஆகிய திரை அரங்குகளின்


# பேராதனை பல்கலை. வளவினுள் சந்தேகத்துக்குரிய நடமாட்டம்

## மாகாணசபை உறுப்பினர் பொலிசார் வசம்

[கொழும்பு]

பேராதனை பல்கலைக்கழக வளவினுள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய வட மத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவர் உட்பட நால்வர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் இவர்களில் இருவர் பெண்களாவர் இவர்கள் வந்த கொர்லா ரகக் காரும் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது பேராதனைப் பல்கலைக்கழக வளவினுள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்களையும் மடக்கிப் பிடித்த மாணவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நால்வரும் வந்ததாகக் கூறப்படும் கொர்லா காரில் இருந்த ஒருவரை மாணவர்கள் அணுகி விசாரித்த போது அந்நபர் துப்பாக்கியைக்காட்டி மாணவர்களை அச்சுறுத்தியுள்ளார். இந் நபர் பாதுகாப்பு ஊழியர்களின் பிடியிலிருந்து தப்பியோடி விட்டதாக மாணவர்களிடம் கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவ் வாகனம் பாதுகாப்பு ஊழியர்களின் அலுவலகத்திற்கு முன்பாக எரிந்த நிலையில் காணப்பட்டது எனவும் பாதுகாப்பு ஊழியரின் அலுவலக கண்ணாடிகள் நொருக்கப்பட்டிருந்தது எனவும் மேலும் கூறப்படுகிறது இச் சம்பவத்தை தொடர்ந்து பேராதனை பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதாகவும்தெரியவருகின்றது.


புலிகளின் குரல்


# யாழ். பொது நூலகத்திற்கு புதிய நூல்கள் கொள்வனவு

யாழ். மாநகரசபையினால் யாழ் பொது சன நூலகத்திற்கு நாலரை இலட்சம் ரூபா பெறுமதியான நூல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இது தவிர ஏசியா பவுண்டேசனும் சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதி

# பொலிசாருக்கு வழங்கிய உணவில் நஞ்சு கலப்பு

## இரு பொலிசார் ஆபத்தான நிலையில்

(கொழும்பு)

பொத்துவில் பொலிஸ்நிலையத்தில் பொலிசாருக்கு வழங்கப்பட்ட உணவில் நஞ்சு கலக்கப்பட்டிருந்தது எனவும் அதனை உட்கொண்ட இரு பொலிசார் ஆபத்தான நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ்உணவு விடுதிச் சமையற்காரர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மிகுதி உணவு கொழும்பிற்கு மேலதிக சோதனைக்காக அனுப்பப்பட்டது.

## உலக வங்கியின் புனரமைப்பு

# வேலைத்திட்டக் குழு திங்கள் யாழ். வருகின்றது

[யாழ்ப்பாணம்[

உலக வங்கியின் புனரமைப்பு வேலைத் திட்டக்குழு திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறது.

கடந்த வாரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சென்ற இக்குழு புனரமைப்பு வேலைகள் சம்பந்தமான விபரங்களை ஆராய்ந்தது.

நான்கு பேர் கொண்ட இக் குழுவினர் விமானத்தில் பலாலி வந்து சேர்ந்த பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேருவார்கள்.

நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற புனரமைப்பு சம்பந்தமான கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டது.

இக் குழுவினர் யாழ் மாவட்டத்தின் பல இடங்களை சுற்றிப் பார்த்து புனரமைப்பிற்கான விபரங்களைப் பெறுவார்கள் எனத் தெரிவிக்கப் பட்டது. [தி, இ[

## மருத்துவ

இலங்கையில் அடிக்கடி ஏற்படும் டாக்டர்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவையை உணர்ந்து இந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது- எனவும் மருத்துவ பீடங்களுக்கு மாணவர்களை கூடுதலாக அனுமதிப்பது தொடர்பாக பீடாதிபதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது எனவும் தெரிவிக்கப் படுகிறது-

இதேம்வளை 1992, 93-ம் கல்வியாண்டில் கல்விப் பொதுத்தராதர, உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 4 பாடங்களிலும் மொத்தமாக 200க்கு மேற்பட்ட புள்ளிகளைப் ·பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெறாத மாணவர்களுக்கு வாய்ப்பொன்றை அளிக்கும் முகமாக இவர்களில் 1000 பேருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சமூகவியல், மனையியல், இஸ்லாமிய நாகரிகம், வரலாறு, மேற்கத்திய கலாசாரம், ஆங்கிலம் போன்ற பாடங்களிலேயே இவர்களுக்கு அனுமதி கிடைக்க உள்ளது.

இது இவ்வாறிருக்க, 94/95 ஆம் கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளியை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கும் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விபரங்களை ஜனவரி முதல் வாரமளவில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பல்கலைக்கழக மானியகுழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

## அறுபது

சிபார்சுடன் இம் மாதம் 30-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வெளிநாட்டு பிரிவு, கொள்கைத் திட்டமிடல் மீளாய்வுப் பிரிவு, கல்வி உயர்கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## 5மில்.

வருக்கும் வழங்கப்பட்ட 5 மில்லியன் அமெரிக்க டாலர் பணத்தை மீளப்பெறவே

## மீன்பிடி

தின்போது தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை கடற்படையினர் துரத்தி துரத்தி துப்பாக்கிப் பிரயோகம்செய்தவாறு அவர்களை நெருங்கி கைது செய்தனர்.

பின்னர் அவர்களை பலமாக தாக்கி அவர்களின்

ஆகிய திரை அரங்குகளின்
அகன்ற திரையில்

விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகமும்
நிதர்சனமும் இணைந்து
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

“பிஞ்சு மனம்”

(வர்ண முழு நீளப்படம்)

தினசரி- 6. 30
சனி, ஞாயிறு- 10. 30, 2. 30, 6 30

[சி-10858]

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்
தினசரி 4. 30, 6.30
சனி, ஞாயிறு 10. 30, 4. 30, 6. 30

மன்னார் மாவட்ட கலைபண்பாட்டுக்
கழகம் வழங்கும்

★ எல்லைக் கற்கள் ★

(முழு நீள வர்ணப்படம்)

தினசரி பி.ப 2.30க்கு மட்டும்

விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின்
தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

★ பிஞ்சு மனம் ★

(வர்ண முழு நீளப்படம்)

(சி- 10922)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம், இலக்கத்திலுள்ள ஈழநாதம்பணிமனையில்1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-16**
**வெள்ளி இரவு:**

08. 01ற்கு - கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம் அறிமுகமாவது - ‘‘காலம் எழுதிய வரிகள்’’ கவிதைத் தொகுதி. அதனையடுத்து சிறுகதை - ஆ. ரவீந்திரன் எழுதிய ‘‘நான் போக மாட்டேன்’’ சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- இரா. இராஜேஸ்கண்ணன் எழுதிய ‘‘அம்மா எங்கே’’ ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும்.

08. 25ற்கு - கணப்பொழுது - சி. கண்ணம்மா எழுதிய ‘‘லெப்ரினன்ட் நக்கீரன்’

08. 30ற்கு - செய்திகள்.

08. 40ற்கு - அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய ‘‘இந்திய அரசியல் முறைமையையே கேள்விக்குறியாக்கும் இந்திய வாக்காளன்’’

08. 50ற்கு - வாத்திய கானங்கள்.

09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994-12-17 -**
**சனி காலை:**

07. 02ற்கு - மாவீர வணக்கம்.

07. 15ற்கு - நீங்கள் கேட்டவை.

07. 30ற்கு - செய்திகள்.

07. 35ற்கு - பத்திரிகைச் செய்திகள்.

07. 40ற்கு - நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி.

8. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

திற்கு நாலரை இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவை 1994-ம் நிதியாண்டின் ஒதுக்கீட்டின் கீழேயே பவுண்டேசனும் சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை யாழ். பொது சன நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளது. (27)

...வழங்கப்பட்ட 5 மில்லியன் அமெரிக்க டாலர் பணத்தை மீளப்பெறவே அவர் இப் போராட்டத்தை நடாத்தவேண்டி இருப்பதாகக் கூறப்படுகிறது.

பின்னர் அவர்களை பலமாக தாக்கி அவர்களின் பெறுமதிமிக்க மீன்பிடி உபகரணங்களை அபகரித்துக் கொண்டு விரட்டியடித்து விட்டனர்.

## பாராளுமன்றகூட்டதொடர் நேற்று முதல் ஒத்திவைப்பு

அரசியலமைப்பின் 70-வது விதிக்கு அமைவாக ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காசிறிலங்காப் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை நேற்றுநள்ளிரவுமுதல் ஒத்தி வைத்துள்ளார். இதனைத்தொடர்ந்து பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டம் ஜனவரி 6ஆம்திகதி காலை 9. 30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

## கிளி. வைத்திய அதிகாரியாக சிவகுரு நியமனம்

கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரியாகவும்‘ கிளிநொச்சி சுகாதார சேவைகள் பதில் மாகாண பிரதிப் பணிப்பாளராகவும் டாக்டர் சிவகுரு நேற்று பதவியேற்றுள்ளார்.

மேற்படி நியமனம் தொடர்பான கடிதம் கடந்த திங்கட்கிழமை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இருந்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு கிடைத்தது. யாழ். மாவட்ட மலேரியா தடுப்பியக்க பொறுப்பாளராக இருந்த டாக்டர் சிவகுரு அவர்கள் மேற்படி பதவியை நேற்று பொறுப்பேற்றுள்ளார். [சி, யோ]

### விமானப்படை

சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பொலிசார் இது பற்றி மேலும் கூறுகையில், விமானப் படையின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த இருவர் கட்டு நாயக்க விமானப் படை முகாமின் பின்புறமாகவுள்ள பகுதிக்கு சென்றதாகவும், அப்போது பெண்களுடன் தகாத நடத்தையில் ஈடுபட முயன்றதையடுத்து மோதல் மூண்டதாகவும், குறிப்பிட்டுள்ளனர் இதையடுத்து படுகாயமுற்ற நிலையில் மூவர் நீர்கொழும்பு வைத்திய சாலையில்சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவரது நிலை மோசமானதாக இருக்கக் காணப்படவே அவர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது வழியில் மரணமானார் எனத் தெரிய வருகிறது. இதனையடுத்து விமானப் படையைச்சேர்ந்த எஸ். டபிள்யூ. றக்குநாயக்க டபிள்யூ. ஏ. டி. கஸ்முடுசேன, ஆகியோர் பொலிசாரால்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## பயிற்சித்திட்டம்

ரெட்பார்ணா மற்றும் நோர்வே தொண்டர் நிறுவனம் ஒன்றினால் வடக்கு கிழக்கில் விதவைகள் சிறுவர்களுக்கான பயிற்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வெல்லாவெளி ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கு பாடசாலை முன் கல்வியை வழங்கவும், விதவைகளுக்கு வேலைவாய்ப்பு சுகாதாரப் பணிகளில் பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



### சலமோன் சூசைப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

குருநகர் மவுண்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாக கொண்டவருமாகிய சலமோன் சூசைப்பிள்ளை 13-12-94 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் லூர்த்தம்மாவின் (பூமணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சலமோன் - அக்னஸ் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், சுவாம்பிள்ளை - எலிசபெத் ஆகியோரின் அன்பு மருமகனும், மரீனாவின் (டக்கி) அன்புத்தந்தையும், ஜோசப் அல்பிரட் (இராஜசிங்கம் விற்பனைப் பிரதிநிதி உருக்குக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மாமனாரும், நீல்மரீன் நொய்லீன் மரீன், நொயல் மரீன், நெல்சி மரீன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலம்சென்ற அன்னம்மா (மரியப்பிள்ளை), மரியாம்பிள்ளை, கிளமென்ரா செல்வம், மனுவல்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி. ப. 3-00 மணியளவில் நல்லடக்கத்திற்காக ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அல்பிரட் டக்கி
(மகள்)

‘‘ஆவே மரியா’’
புனித அடைக்கலமாதா வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(10414)